www.padippakam.com

# சுமைகள்

சுமைகள்–14 பங்குனி, சித்திரை, வைகாசி 1995 Sumaihal Nr. 14, september, oktober 1995, Tromsø, Norge Løssalg kr. 10,-



## நோர்வேயில் ................ ...... எழூற்சி பெறும் நாசிசம் !!

### நாசிச எழூற்சியும் மாகாண, நகரசபைத் தேர்தலும் நமக்கு காட்டுவதென்ன? பட்டுவேட்டி பற்றியகனவிலிருந்தால் கட்டிமிருக்கும் கோவணமும் களவாடப்படும்"



நடந்து முடிந்த மாகாண, நகரசபைத் தேர்தலில் நாசிச, பாசிச, நிறவெறியைத் தமது அரசியல்கருத்தாகக் கொண்ட அரசியற்கட்சிகள் மாபெரும் வெற்றியீட்டி உள்ளன. இத்துடன் இரண்டாவது தடவையாக வெளிநாட்டவர் பற்றிய பிரச்சனை மாகாண, நகர சபைத் தேர்தலில் முக்கிய இடம் பெற்ற விவாதமாகும். 1991இல் நடந்த தேர்தலிலும் வலதுசாரிக்கட்சிகள் மாபெரும் வெற்றியீட்டின.

நடந்து முடிந்த தேர்தலில் நிறவெறியையும், வெளிநாட்டவர் எதிர்ப்பையும் அடிப்படையாகக் கொண்ட கார்ல் ஈவார் காகனின் கட்சியான நோர்வே முன்னேற்றக் கட்சி (FRP) 12 வீதமான வாக்காளர்களின் வாக்குகளைப் பெற்று நாட்டில் மூன்றாவது பெரிய கட்சியாகவுள்ளது. இதைவிட நாசிக் கட்சிகளான (FLP) தந்தையர் நாட்டுக் கட்சி, (HFJ) அன்னியர்களை தம் நாட்டிற்கு திருப்பி அனுப்ப உதவுங்கள், (NMI) அன்னிய குடியேற்றத்திற்கு எதிரான நோர்வேயியர்கள் கட்சி, போன்ற கட்சிகளும் பல நகரசபைகளில் வெற்றியீட்டி உள்ளன.

சமூக ஆய்வு வல்லுனர்கள் தேர்தல் நடந்தபின் செய்த ஆய்வின்படி, நோர்வேயின் 55 வீதமான மக்கள் கறுப்புநிறக் குடியேறிகளுக்கும், அன்னியக் கலாச்சாரத்திற்கும் எதிராகவுள்ளதாக தெரியவருகின்றது. நாசிச, பாசிச, நிறவெறிக் கட்சிகளைத் தவிர்ந்த மற்றைய கட்சிகளிலும் நிறவாதம் ஓங்கிநிற்கிறது.

கிறிஸ்தவ மக்கள் கட்சி (KRF) 34 வீதம்

நோர்வே மத்திய கட்சி (SP) 21வீதம்

நோர்வே தொழிலாளர் கட்சி (AP) 22.2 வீதம்

வலது சாரிக்கட்சி (HØYRE) 25 வீதம்

சோசலிஸ் இடது (SV) 7.5 வீதம்

மேற்குறிப்புட்டுள்ள வீதமான மேற்படி கட்சிகளின் வாக்காளர்கள் நிறவாதிகாளாவர். இவ்வாக்காளர்களின் கருத்துப்படி நோர்வேயில் கறுப்பர்கள் தொகை பெருகிவருவதினால்

1) நோர்வேக் கலாச்சாரம் பாதிக்கப்படுகிறது

2) கறுப்பர்கள் தமது வேலைவாய்பைத் தட்டிப்பறிக்கின்றனர்

3) பல நோய்கிருமிகளை நோர்வேக்குள் கறுப்பர்கள் கொண்டு வருகின்றனர்.

4) பயங்கரவாதம் பெருகுகிறது

*தொடர்ச்சி 6 பக்கம்* ☞

## ஈழப்போரின் இழுபறிநிலை தீராத் துயரில் ஈழத்தமிழர்கள்

இலங்கை இனப்பிரச்சனைக்கு அரைகுறை அரசியல் திட்டத்தினாலோ, முழு அளவிலான இராணுவப் படையெடுப்புகளாலோ விடிவு காண முடியாது என்பது மீண்டும் ஒருமுறை நிருபணமாகியுள்ளது.

போர் என்பதன் உடனடி நோக்கம் தன்னைக் காத்துக் கொண்டு எதிரியை அழிப்பது தான். இது எல்லாப் போர்களுக்கும் பொருந்தும். போர்க்களம் என்றாலே அது கோரமாகத்தான் இருக்கும். அங்கே மனிதாபிமானம் பற்றி பேச்செல்லாம் பத்தாம்பசளித்தனமே. ஆகவே எதிரிப்படையைக் கொல்வதில் ஈவிரக்கமற்ற மிருக வெறியைப்புரிந்து கொள்ள முடியும். யூலை 28ந் திகதி அதிகாலையில் ஈழத்தின் விழும்பில் உள்ள மணலாறு வெலிஓயா சிங்கள இராணுவ முகாமைத் தாக்குவதற்கு முன்னேறிய தமிழீழ விடுதலைப் புலிப்படையை, ஈழத்துரோகிகளின் உளவுச் செய்தியை முன்கூட்டியே அறிந்த சிங்கள இராணுவம் சுற்றி வளைத்து

*தொடர்ச்சி 7 பக்கம்* ☞

படிப்பகம்

*உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட மக்களே ஒன்று சேருங்கள்! Arbeidere og undertrykte i alle land - foren dere!*

www.padippakam.com



## சுமைகள்

யுத்த வெறிபிடித்த சந்திரிக்காஅரசு தற்போது பாரிய அழிவை நம் தேசத்தில் முன் என்றும் நடைபெறாதவாறு தன் யுத்தஇயந்திரத்தைக் கொண்டு ஏற்படுத்தி வருகின்றது. நாம் கடந்த இதழில் கூறியது போல் உலகத்தை ஏமாற்ற இனப்பிரச்சனைக்கு தீர்வை முன்வைத்துவிட்டு, பின்கதவால் உலக நாடுகளிடம் ஆயுதத்தை கொள்வனவு செய்து, நாட்டை பிணக்காடாக்கிறது அரசு. கடந்த ஒருவாரங்களுக்குள் யாழ்பாணக் குடாநாட்டுக்குள் மட்டும் 500 மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவற்றுள் 41 சிறுவர்கள் நாகர் கோவில் பாடசாலை மீதான இலங்கை அரசின் விமானப்படைத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர். புலிகளை ஒழித்துக் கட்டுவதாகக் கூறிக் கொண்டு அப்பாவி மக்களை அழித்தொழிக்கும் சந்திரிக்காஅரசு யாழ்பாணத்தில் மட்டுமல்ல கிழக்கிலும் கொழும்புப் பிரதேசத்திலும் கூட தனது கட்டாக்காலி காடையரைக் கொண்டு தமிழர்கள், முஸ்லீம்கள், மலையக மக்கள் மீது தனது பயங்கர வாதத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது. முன்னைய யூஎன்பி அரசின் ஆட்சியில் நடைபெற்றது போல் இனந்தெரியாத பிணங்கள் வாவிகளிலும், குழங்களிலும், ஆற்றங்கரைகளிலும், கடற்கறைஓரங்களிலும் கரை ஒதுங்குகின்றன. நாற்றமெடுத்த அரசியல் நடத்தும் சந்திரிக்காவின் அரசிற்கு வால்பிடிக்கும் தமிழ்கட்டாக்காலி கூட்டம் சிங்களப் பிணந்தின்னிகளுடன் சேர்ந்து இவ்வரசியற் கொலைகளை நடத்துகின்றனர்.

இது ஒருபுறமிருக்க சந்திரிக்கா முன்வைத்த இனப்பிரச்சனைக்கான தீர்வுத் திட்டத்தை தலையில் வைத்தபடி, புலம்பெயர்ந்த நாடுகளிலும், இலங்கையிலும் பல "தமிழ் முற்போக்குகள்" எச்சில் வடிய வடிய இத்திட்டம் முற்போக்கானது என பிரச்சாரம் செய்கின்றனர். நாட்டில் என்ன நடந்தாலும் அதைத் தமது சுயவிளம்பரத்திற்கு பாவிக்கும் பொறிக்கித்தனமான இத்தமிழ் அரசியல்வாதிகள், தாம்தான் இலங்கைப் பிரச்சனைக்கு தீர்வை முன்வைக்கும் "முற்போக்குகள்" எனக் காட்டிக் கொள்ளும் இன்றைய நிலையில், மக்கள் இக்குள்ளநரிகளின் ஏமாற்று வித்தையை புரிந்து கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

மற்ரெரு புறத்தில் மக்கள் பற்றியோ அல்லது சுயநிர்ணைய உரிமைப் போரட்டம் பற்றியோ எந்தவிதச் சிந்தனையும் இன்றி வெறும் குறுட்டு யுத்தம் நடத்துகின்றனர் புலிகள். தற்போது பாரிய இழப்பிற்கு முகம் கொடுத்து வரும் புலிகள் ஏந்த விதத்திலும் தமது இராணுவக் கண்ணோட்டத்தில் மாற்றம் செய்வதாக தெரியவில்லை. அரசியலற்ற துப்பாக்கிக்கு நண்பர் யார் பகைவர் யார் எனத் தெரிந்து கொள்ள எக்காலத்திலும் முடிவதில்லை. புலிகளின் முழுவரலாறும் இதையேகாட்டி நிற்கின்றது. மக்களை பதட்ட நிலைக்கு உள்ளாக்கி, அதனடிப்படையில் இராணுவத்தை விரிவுபடுத்தி நடத்தப்படும் யுத்தம் என்றும் மக்கள் யுத்தமாகாது. எமது இவ்விமர்சனமானது பல நூறு தடவைகள் பல சக்திகளால் புலிகள் மீது வைக்கப்பட்டது. ஆகவே இது ஒன்றும் புதிதான கண்டுபிடிப்பல்ல புலிகளின் பாசிசத்தன்மை யாவரும் அறிந்ததே. அரசியல் மாற்றத்திற்கு உழைக்காமல் புலிகளை மட்டும் திட்டித் தீர்பதனால் எந்தவிதமான தீர்வும் இலங்கையில் ஏற்படப் போவதில்லை. திட்டித் தீர்ப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கும் கூட்டத்தினரோ அல்லது புலிகளுக்கு ஏதிரான மாற்றுக் கருத்தைக் கொண்டவர்களாகத் தம்மைக் காட்டிக் கொண்டு தமிழீழமுன்னணியை நாடி நிற்கும் சக்திகளோ இன்று வரையும் எமது

மாற்றப்பட வேண்டு22க்ஷால் புதிய விவாதக் கசத்டக்களை அடிப்படையாகக் கொண்ட விவாதங்கள் மக்கள் நலனில் அக்கறை கொண்ட சக்திகளால் தொடக்கப்பட வேண்டியுள்ளதுடன் இணைந்து செயற்படவும் முன்வரவேண்டும்.

# பாலியல் பலாத்கா

# எதிர்காலச்

இன்று உலகில் பலபாகங்களில் பலவிதமான வகையில் பாலியல் பலாத்காரம் நடாத்தப்பட்டவண்ணம் உள்ளது. ஆரம்பகாலத்தில் இவ்வாணாதிக்க சமூகத்தின் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளானவர்கள் அதிகமாகப் பெண்களே. பெண்களை தமது இச்சையைத் தீர்க்கும் பண்டமாக நடத்திய இச்சமூகம் தன்னை யார் என தன்னாலேயே உணராமல் இருக்கும் சிறுவர்களை தமது காம இச்சையைத் தீர்க்கும் பண்டமாகப் பயன்படுத்த முனைகின்றது. இன்று உலகில் கானப்படும் வறுமையைப் பயன்படுத்தியே இதற்கு வழிகோலும் இவ்வாணாதிக்க முதலாளித்துவ சமூகம், பணத்தால் எதையும் வாங்கிவிட முடியும் எனநினைக்கும் இச்சமூகம், தமது இச்சையைப் பூர்த்தி செய்ய சிறுவர்களை நாடுகின்றது. முன்னைய காலத்தில் பெண்களை விபச்சாரம் நடத்தத் துண்டிய அதே முறையை இன்று சிறுவர்களுக்கும் பயன்படுத்துகின்றது. முன்பு ஆங்காங்கே இரகசியமாக நடாத்தப்பட்ட சிறுவர்கள் மீதான பாலியல் வன்முறையானது இன்று நிறுவனமயப்படுத்தி நடாதப்பட்டுவருகின்றது. இவ்வாறு சிறுவர்களை பாலியல் வன்முறைக்கு தூன்டும் விடையங்கள் பற்றியும் அதை எவ்வாறு தற்போது நிறுவனமயப்படுத்தி உள்ளனர் என்பதுபற்றியும், இதற்கு இன்று என்ன தீர்வை நம்மால் வைக்க முடியும் என்பது பற்றியும் இக்கட்டுரையில் ஆராய முனைகின்றேன்.

மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதார நிலை

மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தளவில் அவற்றின் பொருளாதாரத்தை நிர்ணயிப்பது ஐரோப்பா, அமேரிக்காவின் நிதிநிறுவனமான ஐ.எம்.எவ் ஆகும். இதைவிட இந்நாடுகளுக்கு வருமானத்தை எட்டித்தருவனவாக அவற்றிடம் காணப்படும் மூலவளங்களின் பங்கும் உண்டு. இருந்த போதும் மூலவளங்களை விட அதிகளவு வருமானத்தை அல்லது அன்னியச் செலாவணியை பெற்றுத்தருவது உல்லாசப்பிரயாணிகளின் வரவே. பலநாடுகளில் வறுமையால் சிக்குண்டு காணப்படுவதாலும், இன்று எதையும் தீர்மானிக்கும் பொறுப்பை அமெரிக்கா, யப்பான், ஐரோப்பிய நாடுகள் கைப்பற்றியுள்ளதாலும் இம் மூன்றாம் உலக நாடுகள் தமது பொருளாதாரத்தை பேணுவதற்காக ஐரோப்பா, அமேரிக்காவின் நிதிநிறுவனமான ஐ.எம்.எவினை நாடுகின்றன. இன்று பலநாடுகளில் யுத்தங்களின் மூலம் மக்கள் அவஸ்தைப்படும் அதே அளவுக்கு இன்றைய தொழில் நுட்பவளர்ச்சியின் மூலமும் அவஸ்தைப்படுகின்றார்கள். தற்போது அதிகமான பல்தேசியக் கம்பனிகள் மூன்றாம் உலக நாடுகளில் தொழிற்சாலைகளை அமைத்து அதில் பலரை மிகக் குறைந்த சம்பளத்துடன் வேலைக்கு அமர்த்தி வருகின்றன. இதனால் அக்கம்பனிகள் அதிகளவு இலாபத்தை மாதம் ஒன்றுக்குப் பெற்றுக்கொள்கின்றது. இக்கம்பனிகளை நிறுவுவதற்கு மூன்றம் உலக நாட்டு அரசுகள் எவ்விதத் தடையும் இன்றி அனுமதிவளங்குவதற்குக் காரணம் அதன்மூலம் அவ்வரசுகளுக்க வரவு உண்டு எனபதனால். இருப்பினும் அக்கம்பனிகள் மூலம் சுற்றாடல் மாசடைவது ஒருபுறமிருக்க அக்கம்பனிகளுக்க உயர் அதிகாரிகளாகக் கடமையாற்ற வருபவர்களின் அட்டகாசம் இன்னும் அதிகமாகவே உள்ளது.

ஒருவன் மட்டும் உல்லாசமாக வழ நினைக்கும் போது மற்றவர்களை அவன் சுறண்ட ஆரம்பிக்கின்றன் இதனால் யுத்தம் மூட்டப்படுகின்றது. இவ்யுத்தத்திற்கு கொடுக்கப்படும் விலை உயிர்களும், உடமைகளுமே. உடமைகளை இழந்த பலர் இன்று நாளாந்த உணவிற்கு ஏங்கித் தவிக்கும் அதேவேளை ஒருசிலர் இவ்யுத்தத்தினை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றனர். அதன்மூலம் அவர்கள் தாம் எதைச் செய்யவேண்டுமோ அதைச்செய்ய வறியவர்களை நிற்பந்திக்கின்றார்கள். இதேபோல் தற்போது வேலை இல்லாத்தின்டாட்டமும் அதிகரித்து வருவதால் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களை முதலாளிகள் தமது எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கின்றார்கள். இதைமறுப்பவர்களுக்கு வேலையை விட்டு நீக்கப்படும் என மிரட்டுவதன் மூலம் தாம் நினைத்ததை சாதித்து வரும் நிலை தற்பேது உருவாகியுள்ளது. இதேபோல உயிரை விலையாகக் கொடுக்கப்படுவதனால் பல குடும்பங்கள் சீரழிந்து போகின்றன். யுத்தத்தின் மூலம் தமது நாட்டில் செல்வங்களை இழந்த அரசுகள் அதை நிவர்த்தி செய்வதற்காக பலவைவயில் முயற்சியை மேற்கொள்கின்றன அதில் ஒன்றுதான் உல்லாசப்பிரயானிகளின் வருகையை ஊக்குவிக்கும் முயற்சியாகும்.

இவ்வாறு யுத்தத்தின் மூலம் இன்று உலகில் பலலட்சம் குழந்தைகள் அனாதையாக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமது வாழ்கையை கொண்டு செல்ல ஏதாவது செய்யவேண்டிய நிலைக்கு தள்ளுகின்றது இச்சமூகம். இதன்காரணத்தால் பலசிறுவர்கள் சிறுவயதிலேயே தமக்குஏற்ற தொழிலைச்செய்யவே அல்லது மற்றவர்களின் தயவை நாடவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இன்று நடைபெற்று வரும் யுத்தத்தால் தமது பெற்ரோரை இழந்த பல சிறார்கள் நாளை உதயமாகும் சூரியன் தமது வயிற்றுக்கு நல்ல உணவைத் தருவானா என்ற கேள்வியுடன் வீடு வாசலற்று தெருவோரங்களில் படுத்துத் துங்கும் இவர்களை பல பணக்காரர்களின் தரகர்கள் இவர்களின் நிலையைச் தமக்கு சாதகமா பயன்படுத்தி இச்சிறார்களுக்கு தங்க தங்குமிட வசதியும், உடுக்கு உடையும், உண்ண உணவும் கொடுத்து தாம் அவர்களைப் பாதுகாப்பதாபக் கூறி தமது இடத்துக்கு அழைத்துச் செல்கின்றனர். இவர்கள் தமக்கு நல்ல ஒரு எதிர்காலத்தைத் தருவார்கள் என்ற நம்பிக்கையில் அவர்களுடன் புறப்பட்டுச் செல்லும் சிறார்களை நமது வேண்டுகோளுக்கு இணங்கவைக்க பல வழிகளில் முயற்சிக்கின்றனர். முதலில் ஆசைகாட்டி தமது என்னத்தை நிறைவேற்றமுயலும் இவர்கள் அது பலிக்காத பட்சத்தில் வன்முறையை நாடுகின்றனர். ஏன் சிலர் கொல்லப் போவதாகவும் கூறி அவர்களைப் பயமுறுத்தி தமது வேண்டுகோளை நிறைவேற்றுகின்றனர். இச்சிறார்கள் தப்பிச் சென்று பொலீசில் முறையிடலாம் என்ற கோள்வி பலருக்கு எழும்பும் ஆனால் இவ்வகையான செயற்பாட்டிற்கு உடந்தையாகவும் உறுதுனையாகவும் இருப்பவர்கள் அனேகமானோர் அரசியலில் முக்கிய அந்தஸ்தை வகுப்பவர்களே. இவ்வாறு தமது செல்வாக்கைப்

வங்கி கணக்கு இலக்கம்
8245 40 59545
Sparebanken Nor
தபால் கணக்கு இலக்கம்
0826 08 68293
சந்தா வருடம் 60 குரோணர்
வெளிநாடு 10 us $

**Redaksjon:**
Sumaihal redaksjonskommite.
**Produksjon og distribusjon:**
Sumaihal.
**Layout og produksjons-ansvarlig:** Henrik Ormåsen.
**Trykk:** Bladet Tromsø i et opplag på 2000.

**Kontoradresse:**
Bankgt.1, 9001 Tromsø
**Tlf:** 77 65 65 91
**Kontortid:**
Ons. 17.00-20.00
Fre. 13.00-17.00
**Postadresse:**
Boks 415, 9001 Tromsø

படிப்பகம்

www.padippakam.com



# ரத்திற்குள்ளாகும் சந்ததியினர்

பயன்படுத்தி தமது எண்ணத்தை நிறைவேற்றக் கூடிய நிலைக்கு வந்த சிறார்களை தரகர்கள் தமது தேவைக் கேற்ப பயன்படுத்திக் கொள்கின்றனர். இதில் ஒரு வழிதான் சிறுவர்களை உல்லாசப்பிரயாணிகளிடம், அவர்கள் (உல்லாசப்பிரயாணிகளின்) தமது பாலியல் வக்கிரங்களைத் தீர்த்துக்கொளவதற்காக் விலைபேசி விற்பது. இதில் சிலர் நாளாந்த விலைக்கும் சிலர் கிழமை, மாதம் போன்ற பலவைகையில் உல்லாசப்பிரயானிகளிடம் விற்கப்படுகின்றனர். இதனால் கிடைக்கும் இலாபத்தை தாம் செகுசாக வாழ்வதற்கும் தமது நிலையை உயர்த்திக் கொள்வதற்குமே பயன் படுத்தி வருகின்றனர். ஆனால் இத்தொழிலில் ஈடுபடும் சிறார்களோ தமது உடலை விற்றும் தரகர்களிடம் சிலவேளைகளில் அடி, உதை வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதற்கு அன்மையில் நேபாள தேசத்தில் நடந்த சம்பவம் ஒன்றைக் கீழே தருகின்றேன் இதனை ஏசியா வேச் என்ற மனித உரிமைக் கண்காணிப்பு அமைப்பினால் ஐக்கிய நாடுகள் சபையினால் 4.9.95 அன்று நடைபெற்ற உலகப் பெண்கள் மகாநாட்டிற்காகத் தயாரிக்கப்பட்டது.

14 வயதுடைய நீலா என்ற சிறுமி தனது வளர்ப்புத் தந்தையால் கடத்தப்பட்டு பொம்பேயில் விற்கப்பட்டாள். அவளை வாங்கிய அத்த(ா)ரகன் அச்சிறுமியை 1.100 குரோனர்களுக்கு தனது வாடிக்கையாளனுக்கு ஓர் இரவிற்கு விற்றான். இச்சிறுமி 1 வருடமாக அந்த நரகத்தில் வாழ்தாள். அதன்பின் பொலிசாரின் அவ்விடுதிமீதான பாச்சலால் அச்சிறுமி விடுவிக்கப்பட்டு தனது செந்தநாடான நேபாளத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டாள். அப்போது அவளுக்கு எயிட்ஸ் தொற்றியிருந்தது. இச்சிறுமி நேபளத்துக்குள் வந்ததை அறிந்த பத்திரிகை நிருபர்கள் அச்சிறுமியின் கதையையும், புகைப்படத்தையும் பத்திரிகையில் பிரசுரித்தனர். இதனால் அச்சிறுமிபற்றி நேபானத்தில் பரபரப்பாகப் பேசப்பட்டதைத் தொடர்ந்து தனது செந்த ஊரிற்கு சென்று வாளமுடியாத நிலை ஏற்பட்டது அச்சிறுமிக்கு. இதனால் தற்போது இச்சிறுமி நேபாளத்தின் தலைநகரில் யாரும் ஆதரவற்ற நிலையில் வாழ்ந்துவருகின்றாள். இதே போல தாய்லாந்திலும் குடும்பத்தின் வறுமை காரணமாக ஓர் முதலாளியிடம் கடன்வாங்கிய ஏழை விவசமி தனது கடனைக் கட்ட முடியாததால் தனது 12 வயதுச் சிறுமியை அவ்முதலாளிக்கு கடனுக்கான முதல் பணமாகக் கொடுக்கவேன்டியதாயிற்று அதன்பின்தான் அச்சிறுமிபற்றியோ அல்லது அச்சிறுமிக்கு என்ன நடந்தது என்பது பற்றியோ எழுதவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அச்சிறுமிக்க இறுதியாகக் கிடைத்தது எயிட்ஸ் நோய்தான்.

உல்லாசப் பிரயானமும் சிறுவர்கள் மீதான பாலியல்பலாத்காரமும் சிறுவர், சிறுமியர்களை இத்தொழிலில் முதலிட்டுள்ளனர். பிலிப்பைன்ஸ் மாத்திரம் 1 லட்சத்திற்கும் அதிகமான 18 வயதிற்கு உட்பட்ட சிறுவர், சிறுமியர் பாலியற்பலாத்காரச் சந்தையில் விலை பேசப்படுகின்றனர். தாய்லாந்தில் விபச்சாரத்தில் ஈடுபட்டுள்ள சிறுவர் சிறுமியரின் தொகை இரண்டு லட்சத்திற்கும் அதிகமானவர்கள் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்நாடுகளில் பெரும்பாலும் பெண் சிறுமிகளே பணக்கார நாட்டுப்

இலங்கையில் தென்பகுதிவாழ் சிங்களச்சிறார்களோ இக்கொடுமைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். ஐக்கியதேசியக்கட்சியின் தனியார் மயப்படுத்தப்பட்ட திறந்தபொருளாதாரக் கொள்கையும், தேசிய இனப்பிரச்சனையும் கிராமப்புற, சிறுநகர்வாழ் சிங்களகுடிகளை வெகுவாகப் பாதித்துள்ளது. இன்னெருவகையில் பார்த்தால் இனப்பிரச்சனையால் பெரும் பாதிப்பை அடைபவர்கள் சிங்களமக்களே. இம்மக்களின் இளைஞ்ஞர்கள்




நோர்வேஜிய உல்லாசப்பயனியால் பாலியல் பலாத்காரத்துக்குள்ளாகும் தாய்லாந்து நாட்டுச் சிறுமி (நன்றி : Kvinner sammen)

சிறுவர் மீதான பாலியற் பலாத்காரமானது பெருமளவில் நம் நாடுகளுக்கு உல்லாசப் பிரயாணம் வரும் மேற்கத்தைய நாட்டினராலேயே நிகழ்த்தப்படுகின்றது. ஐரோப்பிய, வட அமெரிக்கா நாடுகளின் உல்லாசப் பயண ஏஜன்சிகள் சட்டத்திற்கு முரணான வரையில் பாலியல்பலாத்காரப் பயண ஏற்பாடுகளை, நம் நாடுகளின் ஏஜன்சிகளின் உதவியுடன் ஏற்பாடு செய்கின்றனர். பல கோடி டொலர்களை மூலதனமாகக் கொண்டு நடாத்துப்படும் இவ்வியாபாரமானது பலமூன்றாம் உலக நாடுகளின் அன்னியச் செலாவணியை ஈடுசெய்யும் முக்கிய காரணியாகும்.

தற்போது ஐரோப்பாவின் விபச்சாரவிடுதியான தாய்லாந்தும், அமெரிக்காவின் விபச்சாரவிடுதியான பிலிப்பையின்சும் உல்லாசப்பயணத்துறையின் பெரும் தொகையை முதலீடு செய்துள்ள நாடுகளாகும் . பணமுதலீட்டைத் தவிர பல்லாயிரக்கணக்கான பெண்கள், பண்றிகளின் பாலியல் வக்கிரங்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

ஆண் சிறுவர்கள் உல்லாசப்பயணிகளின் பாலியல் வக்கிரங்களுக்கு உட்படுத்தப்படும் நாடுகளில் முன்னிடம் வகிக்கம் நாடு நம்தேசம் இலங்கையாகும். இலங்கையில் 75ஆயிரத்திற்கும் மேலானவர்கள் பாலியல் வக்கிர விபச்சாரத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சர்வதேச சிறுவர் அமைப்பின் கருத்துப்படி முற்றுமுழுதான தொகை கணக்கிட முடியாதுள்ளதாகத் தெரிவிக்கின்றன. இலங்கையில் பாலியல்வக்கிரத்திற்கு உள்ளாக்கப்படும் சிறுவர்கள் பலர் போதைவஸ்திற்கு அடிமையானவர்களாக உள்ளனர். உள்நாட்டு, வெளிநாட்டு கிரிமினல் கும்பல்களும் இலங்கை அரசியல் வாதிகள், பணமுதலைகளும் இணைந்து நடத்தும் போதைவஸ்து வியாபாரமும், சிறுவர்கள் விபச்சாரமும் இலங்கையில் அமோகமாக நடக்கிறது.

இராணுவத்தில் பலியாகின்றனர், சிறுவர்கள் அரசின் விபச்சாரபொருளாதாரத் திட்டத்திற்கு பலியாகின்றனர். சர்வதேசசிறுவர் நலஅமைப்புகளின் கருத்துப்படி தற்போது இலங்கையில் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்படும் சிறுவர் தொகை அதிகரித்துள்ளது.

தற்போது பிலிப்பையின்சிலும், தாய்லாந்திலும் எயிட்ஸ் நோயின் பாதிப்பு அதிகரித்து உள்ளதினாலேயே இலங்கையில் பாலியல்வக்கிர உல்லாசப் பிரயாணிகளின் வருகை அதிகரித்துள்ளது. இலங்கை அரசு, பல ஐரோப்பிய வடஅமெரிக்க ஏயன்சிகளின் உதவியுடன் விபச்சார வியாபாரத்தை மென்மேலும் ஊக்கிவித்து வருகிறது.


இலங்கையில் நடைபெறும் மற்றுமொரு வியாபாரம் பாலியல்வக்கிரத் திரைப்படத் தயாரிப்பாகும். கடந்தவருடம் சுவிடன் நாட்டில் 200 மணிநேர நீளம் கொண்ட பலநூறு வீடியோத் திரைப்படங்கள் சுவிடன் பொலிசாரால் கைப்படற்றப்பட்டது. இதில் 70 மணிநேரத் திரைப்படம், இலங்கைச் சிறுவர் சிறுமியரை பாலியல் வதைக்கு உட்படுத்தி தயாரிக்கப்பட்டதாகும். இலங்கை அரசானது மேற்படி சிறுவர் சிறுமியர் மீதான பலாத்காரத்தை ஊக்கிவிக்கின்றதே ஒழிய தடை செய்வதற்கு எந்தவோ முயற்சியும் செய்வதாகத் தெரியவில்லை. (இது எல்லா மூன்றாம் உலகநாடுகளுக்கும் பொருந்தும்) கடந்தவருடம் பிரான்சைச் சேர்ந்த ஒருவன் இரு சிறார்களுடன் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டிருக்கையில் பொலிசாரால் கைது செய்யப்பட்டான். அக்கொடுமைக்காரனை இலங்கை அரசு எதுவிதத்திலும் தண்டிக்கவில்லை. சிலஆயிரம் ரூபாய் தண்டம் செலுத்திவிட்டு அவன் பிரான்சிற்கு திரும்பிவிட்டான்.

இலங்கையில் போர் மட்டும் அழிவை ஏற்படுத்தவில்லை மனித இனஅழிவிற்கு வழிவகுக்கும் எயிட்ஸ் நோயும் நம்நாட்டில் பாரிய அழிவை ஏற்படுத்தப் போகின்றது. இவ்வழிவானது தமிழன், சிங்களவன், சாதி, மதம் பாற்கப் போவதில்லை. மாறாக இலங்கைவாழ் அனைவரையும் பாதிக்கும். மேலும் இச்சிறார்கள் மீதான பலாத்காரம் தற்போது சர்வதேசப் பிரச்சனையாக வளர்ந்து வருகின்றது. இச்செயற்பாட்டை கண்டித்து பல மனித உரிமைக்கழகங்கள் குரல் கொடுத்த போதிலும் இதை யாரும் செவிமடுப்பதாக இல்லை. அத்தோடு சிறுவர்கள் மீதான பாலியல் பலாத்தகாரத்தைத் தண்டிக்கும் வகையில் உலகெங்கும் பொதுவாகப்பயன்படுத்தக் கூடிய சட்டம் ஒன்றும் இதுவரை இயற்றப்படவில்லை என பல மனித உரினைக் கழகங்கள் கண்டித்து வருகின்றது. பொதுவான சட்டம் அதிகூடிய தண்டனையைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் அப்போதுதான் ஓரளவிற்காவது இச்சமூக அமைப்பில் இக்குற்றத்தை கட்டுப்படுத்த முடியும். இருந்த போதும் பொதுவான சட்டம் இயற்றப்படுவதினால் மட்டும் சிறுவர்கள் மீதான இவ்வன்முறை அற்றுப் போய்விடும் என்று கூறமுடியாது. மாறாக தற்போதுள்ள முதலாளித்துவ, ஆணாதிக்க சமூகஅமைப்பு முறைமாற்றப்பட்டு, சமநிலைப் படுத்தப்பட்ட வித்தியாசமற்ற சமூகஅமைப்பை உருவாக்குவதன் மூலமே இவ்வாறான விடயங்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வை வைக்கமுடியும்.

படிப்பகம்

# சீரழிந்த சினிமாவும் ............... எமது ரசனையும் ...............





மச்சான் கௌரி மனோகரி மண்ட படம் பார்தனியே" "பாத்தனான் எனக்குப்பிடிக்கயில்ல அதை என்னால் ரசிக்கவும் முடியேல்ல, யதார்த்தமாகவுமில்ல"

"ஏனடா"

"எனக்குத் தெரியாது, படு சுத்து மாத்து, பம்மாத்து, கதானாயகி மதல்ல ஒருவனைக் கலியாணம் கட்டி அவன்ர கொடுமை தாங்காமை டைவோஸ் பண்ணிப் போட்டு வேறெருவனைக் காதலிக்கிறாள். அப்ப பிரிஞ்சு போன முதல் கணவன் திருந்தி திரும்பி வர, காதலிச்சவன் கதாநாயகி முதல் கணவன் திருந்திட்டபடியா அவனோட திரும்பவும் சேர்ந்து வாழும்படி செல்லுறான். கதாநாயகி ஒருத்தரும் வேண்டாம் ஆண் இல்லாத வாழ்வு வாழப் போறன், சங்கீதமே தன் வாழ்வு என்றாள். படம் முடியுது..

"........ இதில என்ன பிழையிருக்கு ......"

"....யதார்த்தமாகப் பார்த்தா மச்சான், ஆம்பிள்ளை இல்லாது ஒரு பொம்பிள்ளை சீவிக்க முடியாது. —— படத்தட முடிவ ஏற்றுக் கொள்ளேலாது. சும்மா கற்பனை பண்ணி நீல் விட்டிருக்கிறாங்கள் அதத்தான் விட்டாலும் ரசிக்கிற மாதிரி ஒரு பாட்டு, டான்ஸ், ஒரு சண்டை கூடக் கிடையாது—— அறுவை —"

விவாதம் தொடர்ந்தாலும் "கௌரி மனோகரி" பற்றியே அது ஏன் பிடிக்கவில்லை என்பது பற்றியே என் நண்பனிடம் இருந்து சரியான பதில் கிடைக்கப் போவதில்லை.

இன்று எம்மவரது சினிமா ரசனை உள்ளது என்பதற்கு இவனெருவனே சாட்சி. "குணா" கமலகாசனைப் பிடிக்காது. ஆனால் "சிங்காரவேலன்" பிடிக்கும் இவன் ரகுவரனுக்கு ரசிகன். "ஏழாவது மனிதன்" ரகுவரனுக்கல்ல. "புரியாத புதிர்" படத்தில் பெண்ணைத் துன்புறுத்தும்வில்லன் ரகுவரனுக்கு, "அந்தமாதிரி நடிச்சிருக்கிறான்" படம் பார்த்து பின் வந்த விமர்சனம். இவற்றிற்கு மேலாக ரஜனிகாந்படங்களெல்லாம் இவனிற்கு "அந்த மாதிரி".

ஏன் இப்படி எமது ரசனை உள்ளது? யதார்த்தம் என்று சொல்லிக்கொண்டு தாவித் தாவி இருபத்தைந்து மனிதர்களை உதைக்கும் கதாநாயகர்களையும், ஆயிரம் தேவதைகள் பின்னால் ஓடிவர பாட்டுப்பாடி மரத்தையும் கட்டிப்பிடித்து காதல் புரியும் கதாநாயகிகளையும் ஏற்றுக்கொள்கிறோமே. ஏன் சமூகப்பிரச்சனைகளை யதார்த்த நோக்குடன் அணுகும் கலைப்படைப்புகளை எம்மால் ரசிக்க முடிவதில்லை?

இதைச்சற்று விரிவாக நோக்குவோம். சினிமா என்பது பிரதானமாக "அசையும் விம்பங்களின் வழிவரும் கட்புலக் கவர்ச்சி" என்பது சினிமாவிற்கு அறிஞ்ஞர் தரும் விளக்கம். இவ்விம்பங்களின் வழிவரும் கட்புலக் கவர்ச்சியானது சமூகத்தின் அனைத்துத் தரப்பினையும் இலகுவில் சென்றடையும் ஓர் அரிய சாதனமாகும். ஆனால் எம் தமிழ் சினிமாவானது வெறும் கனவில் மிதக்கவைக்கும் சமூகத்தைசீரழிக்கும் சாதனமாக உருவெடுத்துள்ளது. ஆரம்ப காலத்தில் தமிழ் திரைப்படங்கள் கறுப்பு வெள்ளைக் கனவுகளாக இருந்து வந்தன. இப்போது கலர்க் கனவுகள், வர்ணக்கனவுகள். ஆனால் அதே க(தை)னவு நாயகன், நாயகி.

நமது திரைப்படங்கள் தமிழ் மொழி இலக்கியம் அல்லது தமிழ்ப்பண்பாடு என்ற வட்டத்தினுள் நின்று கொண்டு ( கற்பனாவாதக் கண்ணோட்டத்துடன்) சமூகப் பிரச்சனைகளை அணுகுகிறது இதனால்சரியான வடிவில் யதார்த்தமாக பிரச்சனைகளையோ அல்லது தீர்வையோ சமூகத்திற்கு சொல்வதில் இருந்து தவறுகின்றது.

தமிழ் சினிமாவைப் பொறுத்தளவில் "நிலம் பார்த்த நடைகொண்ட பெண்ணும், ஏறுபோல் நடை கொண்ட ஆணையும்" கொண்டது தமிழ் சமூகம். கதாநாயகியோ அல்லது துணை நடிகை பாத்திரமோ, ஆரம்பத்தில் எவ்வளவு வித்தியாசமாகக் காணப்பட்டாலும், முடிவில் தமிழ் பாரம்பரியத்திற்கு ஏற்ப "அச்சம்", "மடம்", "நாணம்", "பயிர்ப்பு" என்று சொல்லப்படும் நால்வகைக் குணங்களுக்கு (?) பிரதிநிதிகளாகச் சித்தரிக்கப்படுவர். அத்துடன் தாலியையும் கற்பையும்(?) காப்பதற்காக எந்த நிலையிலும் தம்மைத் தியாகம் செய்பவர்களாக காட்டப்படுவர்.

கற்பு, தாலி, பூ, பொட்டு என்ற சம்பிரதாயங்களை இன்று அடிக்கடி தமிழ் சமூகத்திற்கு ஞாபகப் படுத்துவது அல்லது இவற்றைக் கட்டிக் காக்கும் பணியில் தமிழ் சினிமா ஈடுபட்டுள்ளது என்றால் மிகையாகாது. அதேவேளை கதாநாயகன் தனித் தன்மை கொண்ட, அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்த்து வைக்கும் திடம், உறுதி, மற்றும் சாதாரண மனிதனுக்கு இல்லாத அதீத சக்தி கொண்டவனாக் காணப்படுவான். இவனுக்குத்தான் சமூகப் பிரஞ்ஞை இருக்கும். பண்ணையார் கொடுமைகள், அரசியல் வாதிகளின் அடாவடித் தனங்கள் போன்ற முழுச் சமூகத்தையும் பாதிக்கும் பிரச்சனைகளை இவர் தனியே நின்று போராடி தீர்த்து வைப்பார்.

அத்துடன் பெண்களின் பொருளாதாரம், பாதுகாப்புக் (குறிப்பாக கற்பு(?))அனைத்திற்கும் இவர்தான் பாதுகாப்பாக விளங்குவார். சினிமா வருவதற்கு முன் புராண இதிகாசங்களும், சமய நீதிகளும் அவை வழிவந்த நாடகங்களும், ஆணாதிக்கத்தை சமூக நீதியாக கட்டிக்காத்து வந்தன. இன்று விஞ்ஞான வளர்ச்சியால் நவீன பொழுது போக்குச் சாதனங்களால் புராண இதிகாசங்களினதும் நாடகங்களினதும் பண்பாடு குறைந்து விட்டது. அனால் அவைகட்டிக்காத்த ஆணாதிக்கக் கருத்துக்களை இன்றும் சினிமா காத்து வருகிறது. இப்போதும் நவீன சீதைகள் சினிமாவில் "கற்பை"(?) நிருபிக்க தீக்குளிக்கின்றார்கள். கதாநாயகிகள் கதாநாயக ராமர்களை எதிர்பார்க்க படி இருக்கின்றனர். சபதத்தைத் தீர்த்து வைக்க இன்றும் பாண்டவர்களை நம்பிக் காத்திருக்கின்றனர் நவீன பாஞ்சாலிகள். கற்புக்காக தீக்குளிப்பதும், கதாநாயகர்கள் தான் சிறைமீட்க, சபதத்தைத் தீர்த்துக்கொள்ள உதவிக்கு வரவேண்டும் என்பதும் தமிழ் திரைப்படங்களில் நியாயப்படுத்தப்படுகிறது.

தமிழ் சினிமாக் கதையை எடுத்து நோக்குவோமானால், மேற்குறிய தன்மை கொண்ட ஆணையும் பெண்ணையும் சுற்றி அமைக்கப்பட;டிருக்கும். கதாநாயகனின் மிகைப் படுத்தப்பட்ட தன்மை காரணமாக கதையில் சொல்லப்படும் சமூக மாற்றமானது, தனிமனித நிலை அல்லது முயற்சி சார்ந்தே இருக்கும். அத்துடன் தமிழ் பண்பாட்டு வட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டதாக காணப்படும். இத்தன்மை காரணமாக ஆராயப்படவேண்டிய பிரச்சனைகள் ஆராயப்படாமலும், அதன் உக்கிரத் தன்மை விபரிப்பதற்குப் பதிலாக நியாயப் படுத்தலும் காணப்படும். இதனால் புதிய சமுதாய மாற்,றுக் கருத்துக்களையோ அல்லது சிந்தனையைத் துண்டும் செய்திகளையோ சினிமாவில் வழங்க முடிவதில்லை.. அடுத்து தமிழ் சினிமாவில் இன்னும் மோர் முக்கிய பண்புகளில் ஒன்று பாடல்களாகும். பாடல்கள் பாத்திரத்தின் தன்மையை, கதையில் வரும் சம்பவங்களை விளக்கப் பயன்பட்டு வருகின்றது. தமிழ் திரையிசைப் பாடல்களும் கதையைப் போல தமிழ் பண்பாடு மற்றும் இலக்கிய நயங்களை உவமையாகவும் கொண்டு பாடப்படும். பெண்களை வர்ணிப்பதில் தத்துவங்களைச் சொல்வதில் புதிய தமிழ் "பலான" சொற்களை உருவாக்குவதில் தமிழ் சினிமாக் கவிஞ்ஞர்களுக்கே இருக்கும் அபாரத்திறமை அவர்களுக்கே உரித்தானது. பாடல்களின் பங்கு அத்துடன் நின்றுவிடாது கதையில் செல்ல முடியாத அதிவிசேட கனவுலக சஞ்சரிப்பை பார்ப்பவருக்கு காட்சியுடன் இணைந்து கொடுக்கிறது. பாலியற் காட்சிகளை (முதலிரவுக் காட்சிகளில்) தமிழ் பண்பாட்டிற்கு இனங்காட்ட முடியாததால் அதன் இலக்கிய தன்மையுடன் ஒன்றுபட்டு இரட்டை அர்த்தம் தொனிக்கும் வகையில் பாடல்கள் அமைந்திருக்கும்.

ஆரம்ப காலம் முதல் கண்ணதாசன் வரை பாடல்களில் பொதிந்திருக்கும் அர்த்தங்கள் அப்பட்டமாக விளங்காமல் எழுதப்பட்டன. இப்போது "பச்சையாகப் பாடப்படுகிறது. தமிழ் திரைப்படங்களில் விஞ்ஞான முன்னேற்றத்திற்கு ஏற்ப பத்துப் பதினைந்து வருடங்களுக்கு ஒருமுறை வடிவம் (ஒலி) மாறிவரும். முக்கியமான (தமிழ் சினிமாவில்) ஒரு விடையம் இசை. தமிழ் திரையின் பிண்ணனி இசையானது மேற்கத்தைய இசையுடன் எம் இசை வடிவமான கர்ணாடக இசை கலந்ததோர் கலப்பு வடிவமாகும். விம்பங்களின் அசைவு கதையோட்டத்திற்கு ஏற்ப பிண்ணனியில் மென்மையாக இசைப்பதே திரையிசை. அதற்கேற்ப தமிழ் திரையிசை அமைப்பாளர்கள் இசை அமைத்துள்ளனர் என்றால் மிகையாகாது. ஆனால் இன்று "கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல" பிண்ணனி இசைப் பாத்திரங்கள் பேசும் வசன ஒலிகளையும் மிஞ்சி நிற்கிறது. அது மட்டுமன்று இன்று திரைக்குப் பாவிக்கும் சுரத்தட்டு இசைக் கணனி போன்ற வற்றின் முறைகேடான பாவனையினால் "இசை"க்குப் பதிலாக தகர டப்பா, ரங்குப் பெட்டி ஒலிகள் பிண்ணனியில் கேட்கின்றன.

இவ்வாறு சினிமா என்னும் அரிய தொடர்பு சாதனம் சமூக வளர்ச்சிக்குப் பயன்படாமல் அழிவுப் பதையில் எம்மிடையே கீழ்த்தர ரசனையை வளர்த்து வருகிறது. இந்த நிலையில் தமிழ் சினிமாவை, ரசிகர்களை மீட்க சமூக சிந்தனை "சீர்திருத்த நோக்குள்ளவர்கள்" எனப்பேசப்படும் பாலச்சந்தர்கள் அல்லது பாரதிராஜக்களோ முன்வருவதாகத் தெரிவதில்லை. அவர்கள் தரும் முதல் மரியாதை எல்லாம் பணத்திற்காகத் தான் தங்களை வித்தியாசம் காட்டிக்கொண்டு ஒருபுறம் வானமே எல்லை, வேதம் புதிது என்று கூறிக் கொண்டு மறுபுறம் காசு சம்பாரிக்கும் நோக்குடன் "இனிய தமிழ் மக்களுக்கு" ராதாவின் ஜக்கற் அணியா வனப்பையும், பால்கார அண்ணாமலை பணக்கார அண்ணாமலையாகிற அதிசயத்தையும் காட்டுவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம் இவர்களின் சமூகப் பிரஞ்ஞையை. அவ்வப்போது சில நல்லபடைப்புகள் "தழிழ் சினிமாவில்" இருந்து வேறுபட்டு வெளிவராமல் இல்லை. ஆனால் அவை நுகர்வுப் பொருள் கலாச்சாரத்திற்கு தீனிபோடும் தமிழ் திரைப்படங்களிடையே அமுங்கி விடுகின்றன. இதனால் அப்படைப்புக்கள் மக்களை சென்றடைவதில்லை. பெட்டிகளில் முடங்கிக் கிடக்கின்றன. இவை மாற்றப்படவேண்டும். சமூக மாற்றங்களுக்காகப் போராடும் புதிய கலாச்ச□ர சக்□ளின் கைகள□ல இ பொரும் □தாடர்பு சாதனம் சென்றடைய வேண்டும். ஆனாலும் இன்றிருக்கும் சூழலில் எந்த அளவிற்கு சாத்தியம் என்பது கேள்விக்குரிய விடையமே.



www.padippakam.com



# புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் கலாச்சாரம் என்றபெயரால் .............!

## இங்கு பிறக்கும் குழந்தை அதுவும் பெண்குழந்தை என்றால் அப்பெண் குழந்தையின் 'கற்பைக்காக்க' படாதபாடுபடுகின்றனர் .......

அஸ்வினி

1980களின் பின் எம் தேசவிடுதலைப் போராட்டத்தின் பல்வேறு நிகழ்வுகளுடன் 2 லட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் பல்வேறு மேற்கு நாடுகளில் புலம்பெயர்ந்துள்ளனர். இதைவிட 1 லட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் இந்தியாவில் புலம் பெயர்ந்துள்ளனர். மேற்கு நாடுகளில் புலம் பெயர்ந்தோர்களில் 80 வீதமானோர் யாழ் குடாநாட்டைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மத்திய மற்றும் மேற்தட்டு வர்க்கப் பிரிவினராகவுள்ளனர். மேற்கு நாடுகளில் புலம்பெயர்ந்தோரில் 98 வீதமானோர் பொருளாதார அகதியாகவே புலம் பெயர்ந்தவர்கள். இன்று மேற்கு நாடுகளில் இருந்து திரும்பிச் செல்லல் என்பது 5வீதம் அல்லது 10வீதமாக மட்டுமே இருக்கும்.

அந்நிலையில் எம்மவர்கள் மேற்கு நாடுகளில் கைக்கொள்ளும் கலாச்சாரப்பேணல் என்பது பல கேலிக்குரியவையாக உள்ளது. எம் நாட்டில் பிற்போக்கு நிலப்பிரபுத்துவ கலாச்சாரப் பழக்க வழக்கத்துடன் ஒன்றிப்போன பார்ப்பன திணிப்புக் கலாச்சாரம் இணைந்து இங்கு அர்த்தம் அற்ற பல கேலிக்கூத்துகளை கலாச்சாரத்தின் பெயரால் நிகழ்த்துப்படுகின்றது. கலாச்சாரம் என்ற பெயரால் பெண்கள் மீதான அடக்கு முறையும், கலாச்சாரம் என்ற பெயரால் பெண்களை இறுக கட்டிப்போடும் முயற்சிகளையும் காணக் கூடியதாகவுள்ளது. நாம் புலம்பெயர்ந்துள்ள நாடுகள் முதலாளித்துவ நாடுகளாக இருந்த போதும் இடது சாரிகளின் போராட்டத்தினால் மக்கள் சில பல சலுகைகளைப் பெற்றுள்ளனர். தற்போது ஏகாதிபத்தியமாக வளர்ச்சி அடைந்த நாடுகளின் மக்கள் மத்தியில் ஏகாதிபத்தியக் கலாச்சாரம் புரையோடிப்பேயுள்ளது.

இந்நாடுகளுக்கு 'காலடி எடுத்து வைத்த, பின்தங்கிய சமூக பொருளாதார கலாச்சாரம், கொண்ட எம்மக்களை இச்சமூக அமைப்புக்கள் ஒருகணம் திகைக்க வைத்து விடுகிறது. இங்கு வந்த எம்மவர்கள் இச்சமூகத்தின் முற்போக்கான அம்சங்களை கற்றுக் கொள்வதற்கு பதில் தாங்களே சமூகம் பற்றி ஒரு கொச்சைத்தனமான பார்வையை உருவாக்கிக் கொண்டனர்.

தமிழ் கலாச்சாரம் என்றால் என்ன? இக்கேள்வியை ஒரு தமிழரிடம் கேட்பின் விழியைப் பிதுக்கியபடி அப்படி ஒன்று உண்டா என கேட்பார். அதேவேளை கலாச்சாரம் என்ற பெயரால் பல கேலிக் கூத்துக்களை தமிழர்கள் நடத்துகின்றனர்.

1) சாமத்தியசடங்கு செய்தல்
2) தாலி கட்டல்
3) ஐயரைக் கொண்டு திருமணம், அந்திரட்டி, துடக்குக் கழித்தல், ............ போன்ற சடங்குகள்.
4) மணவறை மற்றும் ஆடம்பர வைககளில் நிகழ்ச்சிகன்.
5) பிறந்ததின விழா பெரிதாகக் கொண்டாடல்.
6) பணம் பரிசுப் பொருட்களை கொடுத்தல், வாங்கல் (செய்கடன் செய்தல்).
7) சாதிபார்த்தல்.

இவைகள் தான் எமது கலாச்சாரம் என்று சொல்லப்படுபவை. இதை விட பெண் குழந்தை என்றால் அதை வீட்டுக்குள் பூட்டி வைத்து வளர்க்கும் கலாச்சாரம். இது தமிழ் மக்களின் கலாச்சாரமா? நிச்சயமாக இல்லை.

*சாமத்தியச் சடங்கு*

சாமத்தியச் சடங்கு என்பது பல நூறு வருடங்களுக்கு முன்பு சமுதாயத்தில் மிகக் குறைந்த மக்கள் வாழ்ந்த காலத்தில் ஒரு பெண் திருமணத்திற்கு தயார் என்ற நிலையை அறிவிக்க செய்யப்பட்ட ஒரு நிகழ்ச்சியே சாமத்தியச் சடங்கு. இச் சடங்கு இப் பெண்ணை ஆண் திருமணம் செய்வதுடன் அப்பெண்ணை அடையப் போட்டிகள் வைக்கப்படுவது உண்டு. அதில் வெல்பவன் அப்பெண்ணைக் கைபிடிப்பான். இன்று அப்படி அல்ல. ஒரு பெண் பூப்பெய்தியவுடன் திருமணம் செய்வது இல்லை. பெண் கேட்பதும் இல்லை. ஆனால் இன்று இந்நிகழ்ச்சி செய்வது என்பது அப்பெண்ணை அவமானப் படுத்துவதுடன் அப்பெண் காட்சிக்கு வைக்கப்படுகிறாள். அங்கு யாரும் பெண் கேட்பின் அங்கு கொலையே நடக்கும், என்ற இன்றைய நிலையில் இதை ஏன் செய்ய வேண்டும்? இங்கு இதைச் செய்யும் பெற்றோர் பலர் தமது மூடநம்பிக்கையுடன் கூடிய அறியாமையையுடன், ஒரு பணம் சேர்க்கும் நிகழ்ச்சியாகவே நடத்துகின்றனர். இன்று பெண் விளம்பரப் படுத்தப்பட்டு பணம் பண்ணும் ஒரு சந்தையாக இந்த சாமத்திய சடங்கு நிகழ்ச்சி மாறியுள்ளது.

*தாலிகட்டல்*

தாலிகட்டல், மற்றும் அதை ஒட்டிய சம்பிரதாயங்கள் அதன் உண்மையான நோக்கில் யாரும் செய்வதும் இல்லை கடைப்பிடிப்பதும் இல்லை. தாலி என்பது உண்மையில் மஞ்சல், கொடி என்பது மஞ்சல் கயிறு என்பது ஒரு பாரம்பரியம். ஆனால் அதை இன்று நாம் ஏற்றுக்கொள்வது இல்லை. ஆனால் தாலி, கொடி இன்று தங்கமாக மாறிவிடுகின்றது. இங்கு தாலி என்பது ஒரு பொருள், சந்தையாக அத்திருமணம் வளர்ச்சி பெறுகின்றது.

தாலி என்பதும் அதன் மூன்று முடிச்சும் (தற்போது மூன்று முடிச்சு போட முடியாது என யாரும் கேட்கவேண்டாம்) ஆணின் அடிமை பெண் என்பதை நிறுவுவதேயாகும். ஆனால் யதார்த்தத்தில் இதை ஏற்கும் பெண்கள் கொள்கை அளவில் இதை ஏற்கத் தயாராக இல்லை. மாறாக தாலி வேண்டும் எனக் கோரும் பெண் அதன் உண்மையான அர்த்தத்தை அல்ல. தங்கத்தையே கோருகின்றாள். இங்கு ஆண்கள் இத்தாலியை தங்கம் என்ற நோக்கு இருந்தாலும் பெண் தனது அடிமை என்ற நோக்கில் தான் தாலியைக் கட்டுகிறான். ஒரு பெண் ஆணின் அடிமை என்ற நோக்கில் இதை ஏற்பது இன்று இல்லை. ஆனால் ஒரு ஆண் தனக்கு பெண் ஆடிமை என்ற நோக்கில் தான் இதை அணிவிக்கின்றான்.

இதைவிட கால்விரலுக்கு மெட்டி அணியும் பழக்கம் என்பது ஒரு ஆணை நிமிர்ந்து பார்க்கக் கூடாது என்ற அர்த்தம் கொண்டது. எந்த நேரமும் தனது கால்விரலைப் பார்த்தபடியே இருக்க வேண்டும் என ஒரு பெண்ணைக் கோருகின்றது. இதே நேரம் ஒரு முஸ்லீம் பெண் தனது முகத்துக்கு கறுப்புத் துணியைப் போடுவது என்பது முன்னேற்றமானது. ஏனெனின் அப்பெண் அத்துணியின் கண்வழியாக உலகைப் பாக்கலாம். ஆனால் இந்து சமயப் பெண் உலகை பார்ப்பது குனிந்த நிலையில் விரல்களையே பார்க்க அனுமதிக்கின்றது. (இன்று இங்கு பெண்கள் அதைக் கண்டு பிடிப்பார்களா? இல்லை. இதைச் செல்லின் அங்க மோதல்கள் ஏற்படுகின்றன.) உலகைப் பார்க்காத வகையில் கால்விரல்களைப் பார்க்கக் கோரும் இந்த அணிகலத்தை ஏன்தான் அணிய வேண்டும். இது ஒன்றும் கலாச்சாரம் இல்லை. செம்மறிகள் மட்டுமே தலையைக் குனிந்தபடி மேய்ந்து செல்லும். ஆனால் ஏன் மனிதர்கள் இதைக் கண்டு பிடிக்க வேண்டும். இது போன்று திருமணத்தில் உள்ள பல நடைமுறைகள் செய்பவர்களுக்கே கேலியாக உள்ள அதே நேரத்தில், அதைக் கலாச்சாரம் என்று கடைப்பிடிப்பவர்களாக் உள்ளனர்.

*சாதிபார்த்தல்*

சாதிபார்த்தல் என்பது எமது கலாச்சாரம என எம்மவர்கள் நினைக்கின்றனர். சாதி எப்படி உருவாகியது. கடந்த 1500 ஆண்டுகளுக்கு முன்பு சாதியே இருக்கவில்லை. இந்தியாவில் ஆரியரனா பார்ப்பனர்கள் இந்திய மக்கள் மீதும், அதன் கலாச்சாரத்தின் மீதும் ஆளுமை பெற்ற போது சாதிகள் உருவாக்கப்பட்டன. சாதி என்பது இந்தியா, அதைச் சுற்றிய நாடுகளுக்கு மட்டும் ஒரு படைப்பா என நிங்கள் யாரும் இதுவரை இறைவனிடம் கேட்டிருந்தால் அதன் உண்மை புரிந்திருக்கும். வேதம் ஏன்ற ஒன்றை உருவாக்கிய பார்ப்பனர்கள் தான் அங்கு சாதிக்கும் விளக்கம் கொடுத்தனர். பார்ப்பான் பிரமனின் தலையிலும், பள்ளர், பறையர் பிரமனின் காலிலும் பிறந்ததாக விளக்கம். வேதம் பிரமனின் 4 இடத்தில் பிறந்தவர்களை வேவ்வேறு சாதிப்பிரிவினர் என்கின்றது.

இது எவ்வளவு கற்பனையானது என புரிந்து கொள்ள முடியும். அத்துடன் ஒரு உயிர் எப்படி தோன்றியது. இதற்கு பார்பணிய வேதம் பிரம்மனின் வியர்வைத் துளி இரண்டு மண்ணில் விழுந்தது எனவும் அதில் தான் மனிதன் உதித்தான் என வேறு கற்பனை. கொஞ்சம் அறிவிருப்பின் இதன் கபடத்தைப் புரிந்து கொள்ள முடியும். ஐரோப்பிய சமூகத்தில் பணக்காரன் ஏழை என்ற வேற்றுமை உள்ளதே ஒழிய சாதி வேற்றுமை இல்லை. இங்கு மட்டும் இல்லாத ஒன்று எப்படி இந்தியச் சமூக அமைப்பில் உருவானது.

சாதி அடிப்படையில் எம் சக மனிதர்களை அடக்கி ஒடுக்கும் எம்மவர், வெள்ளையன் அடிக்கும் போது மட்டும் நாசிகள் அடிக்கிறார்கள், ஒடுக்கிறார்கள் எனக் கத்துவது எந்தவகையில் நியாயம். சாதிஎன்பது தமிழ் மக்களின் கலாச்சாரம் அல்ல. அது பார்ப்பனிய ஆக்கிரமிப்புடன் எம்மீது திணித்தவைகளே. பார்ப்பணிய சடங்குகள் அனைத்தும் எமது கலாச்சாரத் தொடர்ச்சியல்ல. ஆக்கிரமிப்பு செய்தவன் எம்மீது காலம் காலமாக திணித்து ஒடுக்கி ஆள்வதாகும்.. புலம் பெயர்ந்த நாடுகளில் சாதி கூடிய, சாதி குறைந்தவர்களுக்கிடையில் பொருளாதார ரீதியில் வேறுபாடு இல்லாத நிலை அவர்களைத் தணித்து இனம் காண முடியாத நிலை உள்ளது. அவர்கள் எல்லோரும் போல் உள்ள மனிதர்களாகவே உள்ளனர். கடந்த எமது சமய சரித்திர வரலாறுகளில் வேறுபாடு உண்டு என்ற கூற்றுகள் இவ்விடத்தில் பெய்த்துப் பேகின்றன. சாதி கலாச்சாரம் அல்ல அதை எறியுங்கள்.

பணம், பரிசுப் பொருட்கள் கொடுக்கலும் வாங்கலும்

பணம் கொடுக்கலும வாங்கலும் ஒரு நிகழ்ச்சியை சந்தையாக மாற்றி விடுகின்றன. ஒரு விழாவை சொந்த சந்தோசத்துக்காக கொண்டாடுவதற்குப் பதில், அதை வியாபாரமாக்கி, மாடு மாதிரி உழைத்த ஒவ்வேரு சதத்தையும் ஒரே நொடியில் தண்ணீராக மாற்றி விடுகின்றனர். உழைப்பின் கடுமையை, துன்பத்தை புரிய முடியாத மாடுகள் வேண்டும் என்றால் இப்படி இருக்க முடியும். ஆனால் மனிதராக இப்படி பல ஆயிரம் ஐரோப்பிய நாணையத்தை ஒரே நொடியில் எந்தப் பிரயோசனத்தையும் பெற்றுத் தராத நிகழ்ச்சிகளில் செலவிடுகின்றனர். இதை ஊக்கிவிக்கவோ சில புரோக்கர்கள், கொள்ளை அடிப்போர், பூசாரிகள் என எல்லோரும் கடைதிறந்து வைத்துள்ளனர். இவர்கள் 8 மணிநேரம் உழைக்க முடியாத பண்றிகளாக உள்ள அதே நேரம் ஒரே நெடியில் சில வருடம் மாடாக உழைத்த பணத்தை சுருட்டிச் செல்கின்றனர். சடங்கு பண்பாடு, கலாச்சாரம், பாரம்பரியம் என்ற பெயரில் பணம் பண்ணும் இந்நிகழ்ச்சிகள் அர்த்தமற்றவை. பணத்தை கொடுத்தல் வாங்கல் என்று ஒரு நிகழ்ச்சியின் சந்தோசத்தையே வியாபாரமாக்கி, பணம் பண்ணும் இந்நிகழ்ச்சிகளை கலாச்சாரம் என்ற பெயரில் நிகழ்த்தப்படுகிறது.

அடுத்து எம்மவர்கள் மேற்க நாடுகளில் இருப்பின் ஒரே ஒரு விடையம் மட்டுமே மிகுந்த கட்டுப்பாடாகவும், கவனத்துடனும் உள்ளனர். அதாவது இங்கு பிறக்கும் குழந்தை அதுவும் பெண்குழந்தை என்றல் அப்பெண் குழந்தையின் கற்பைக் காக்க படாதபாடுபடுகின்றனர். இதுவே இவர்களை நாட்டுக்குப் போக வேண்டும் என பெயரளவில் செல்ல வைக்கின்றது. ஒரு பெண்ணுக்கு கற்பு உண்டு என்றும், அது ஒரு ஆணுக்குமட்டும்

தொடர்ச்சி 6 பக்கம் ☞

படிப்பகம்

www.padippakam.com



## கலாச்சாரத்தின் ...

5 பக்கத் தொடர்......

செந்தமானது என்ற ஆணாதிக்கக் கண்ணோட்டம் இங்கு பிறக்கும் பெண்குழந்தைகளை மனநோய்க்கு இட்டுச் செல்கின்றது.

ஒரு ஆணும் பெண்ணும் தாம் விரும்பி வாழ உரிமை உள்ள அதே நேரம் பிரிந்து செல்லவும் உரிமையுண்டு. ஒரு ஆண் அல்லது பெண் தாம் விரும்பியவருடன் வாழும் உரிமை மறுக்கும் எம் சமூகம் ஒரு ஆணுடன் தான் ஒரு பெண் வாழ்நாள் முழுவதும் எவ்வளவு பலாத்காரம் இருந்தாலும் வாழவேண்டும் எனக் கோருகின்றனர். இது ஆணுக்கு விதிவிலக்கம் கூட. ஒரு பெண் தன் வாழ்வைத் தீர்மானிக்கும் உரிமையை இச்சமூகம் வழங்க மறுக்கின்றது. பெண் ஒரு மனிதப் பிறவியாகவே மதிக்கப்படுவதில்லை. இந்தவகையில் புலம் பெயர்ந்த எமது பெற்றோர் பெண் குழந்தைகள் மீது திணிக்கும் இம் முயற்சி பலத்த பிரச்சனைகளை ஏற்படுத்தி வருகின்றது.

பெண்குழந்தை இங்கு பாடசாலைக்கு செல்லும் போது இச்சமூகக் கலாச்சாரத்தையே பெற்றுக் கொள்கின்றது. இங்குள்ள முற்போக்கு மற்றும் ஏகாதிபத்திய சீரழிவுக் கலாச்சாரத்தையும் பெறுகின்றது. ஒரு சில பெற்றோர் இதைக் கண்டு சகித்துக் கொள்ள முடியாத நிலைக்கு வருகின்றனர். தமது பிற்போக்கு நிலையில் நின்று அக்குழந்தை பெறும் முற்போக்கு மற்றும் சீரழிவுக் கலாச்சாரத்தை எதிர் கொண்டு பெண் அடிமை நிலப்பிரபுத்துவ கலாச்சார வழிகளில் தீர்வைத் திணிக்கின்றனர். இது அக்குழந்தையை மேலும் சீரழிவுக் கலாச்சாரத்தை நோக்கி நகர்த்துகின்றது. முதலில் பெற்றோர்கள் எமது நிலப்பிரபுத்துவ பெண் அடிமை கருத்தில் உள்ள பிற்போக்கை, அது கலாச்சாரம் என்ற நோக்கு நிலையில் இருந்து கைவிடவேண்டும். அதே நேரம் இங்குள்ள முற்போக்கு அம்சங்களை ஏற்றுக் கொண்டு பிற்போக்கு அம்சங்களை விமர்சிக்க வேண்டும். இதை குழந்தைக்கும் படிப்படியாக விழங்கப்படுத்த வேண்டும்.

இங்குள்ளவர்கள் ஒன்றை மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இங்குள்ள வெள்ளைப் பெண்களை வேசையாகப் பார்க்கும் எம் குறுட்டுத் தனத்தை, முட்டாள் தனத்தை ஒழித்துக் கட்ட வேண்டும். இங்குள்ள பெண்கள் வேசையாடுவதாக எமது நிலப்பிரபுத்துவ பெண்ணடிமை ஆணாதிக்க நோக்கில் இதைக் காணும் போக்கு ஒரு புலம் பெயர்ந்த எமது சமூகக் கருத்தாக பயிற்றுவிக்கப்படுகின்றது. இது தவறு. உண்மையில் இங்கள்ள ஒவ்வேரு பெண்ணும் இச்சமூக அமைப்பில் ஒரு ஒழுக்க நெறியைக் கைக்கொள்கின்றனர். இது ஆணுக்கும் பொருந்தும். இங்கு ஒரு ஆண், பெண் விரும்பியவருடன் வாழும் உரிமை உள்ளதால் அது விபச்சாரமாகவோ, வேசைத்தனமாகவே இருப்பதில்லை. இது ஒரு மனிதனின் ஜனநாயக உரிமையாகும்.வாழ்ந்து வரவும், முடியாவிடில் பிரிவும், மீள புதிய வாழ்வும் வாழ உரிமை உண்டு.

இங்கு பிறக்கும் குழந்தைகள் இந்நாட்டுக் குழந்தையாகவே வாழத் துடிக்கும். இன்று பெற்றோர்கள் அவர்கள் மீதான கடும் கட்டுப்பாடுகள் இயல்பில் அக்குழந்தையை பெற்றோரை விட்டு விலகுவதில் இட்டுச் செல்லும். நாடு திரும்பும் எண்ணம் இல்லாத 90 வீதமானோர் ஏன் குழந்தைகளுக்கு எமது கலாச்சாரம் என்று நிலப்பிரபுத்துவ பிற்போக்குச் சிந்தனைகளை திணிக்க வேண்டும். அதற்காக மற்றவர்கள் திணிக்கலாம் என்பதல்ல. உங்கள் சந்ததி தாண்டி அடுத்த சந்ததி அதை அதுவும் ஒரு முதலாளித்துவ நாட்டில் கடைப்பிடிக்கப் போவதில்லை. கலாச்சாரம் என்ற பெயரால் கைகொள்ளும் எல்லாப் பிற்போக்குத் தனத்தையும் கைவிட்டு இங்குள்ள முற்போக்கை பெற்றுக் கொள்ளவும் வேண்டும். இதுதான் நாம் நாடுதிரும்பினாலும் சரி, இங்கு வாழ்ந்தாலும் ஒரு முன்னோக்கிய ஒரே பாதையாகும்.

> புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழர்கள் கலாச்சாரம் என்ற இக்கட்டுரை தற்போது மேற்கு நாடுகளில் தமிழர்களின் போலி கலாச்சார சம்பிரதாயங்களை தோலுரித்துக் காட்டுகின்றது. இங்கு வந்தும் தாம் கலாச்சாரத்தைக் காப்பவர்கள் எனக் கூறியபடி பல மூடநம்பிக்கைகளுக்கு தலைசாய்க்கும் எம்மவர்கள் இனியாவது அவற்றினைக் கைவிட்டு விடும்படி கோருகின்றோம்.
>
> சுமைகள்

## நாசிச எழுற்சியும், தேர்தலும் ....

1 பக்கத் தொடர்......

5) வோதைவஸ்த்துப் பாவனை பெருகுகிறது

6) குற்றச்செயல் பெருகுகிறது

7) கறுப்பர்கள் வீடுகளைத் துப்பரவாக வைத்திருக்காததினால் மாடிக்கட்டிடங்களில் வீட்டின் விற்பனை விலை குறைகிறது (முளுடுமு)

8) பெரும்பான்மைக் கறுப்பர்கள் சமூகநல நிதி உதவியைப் பெற்று சீவியம் நடத்துகின்றனர்.

9) நோர்வேயியர்கள் செலுத்தும் வரியை பலவிதக் குறுக்கு வழிமூலம் கறுப்பர்கள் உறுஞ்சிக் கொள்கின்றனர்.

போன்ற பல நூறு காரணங்களை நோர்வேஜிய நிறவாதிகள், பெரும்பான்மையான நோர்வேயியமக்கள் தமது வெளிநாட்டவர் எதிர்ப்பிற்கான அடிப்படையாகக் கூறுகின்றனர்.

மொத்தத்தில் நிறவாதமும் நாசிச பாசிசமும் நோர்வேயில் வெளிப்படையாக தலைகாட்டத் தொடங்கிவிட்டது. தற்போது நிறவாதியாகவும் வெளிநாட்டவர் எதிர்ப்பாளநாகவும் தம்மைக் காட்டிக் கொள்வது நாகரீகமான செயலாக நோர்வேயியரிடையே ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அரசியற் கட்சிகளைப் பெறுத்த மட்டில் நிறவாத எதிர்ப்பு என்பது வெறும் கண்துடைப்பே. நடைமுறையில் நிறவாத அரசியல் நடத்தும் ஒட்டு மொத்தமான அனைத்து நோர்வேயியக் கட்சிகளும் எந்தவிதவிலை கொடுத்தும் தமது பதவியைக் காப்பதையே முதற்பிரச்சனையாகக் கொண்டுள்ளனர்.

இங்குவந்து குடியேறியுள்ள அகதிகளையும், குடியேறிகளையும் பிரச்சனைக்கான காரணிகளாகவும், வேண்டப்படாத இரண்டாந்தர மிருகங்களாகவுமே இக்கட்சிகள் எம்மை நடைமுறையில் நடத்துகின்றன. தற்போது நோர்வேயில் ஆட்சியில் இருக்கும் தொழிலாளர் கட்சியானது நடைமுறையில் நிறவாதத்தைக் கடைப்பிடிக்கும் கட்சியாகும். இக்கட்சியின் அரசானது

1) முற்றுமுழுதான குடிவரவு (கறுப்பர்களை மட்டும்) நிறுத்தம்

2) குடிவந்தோரின் வேலைவாய்ப்பைக் கடினமாக்கல்

3) குடிவந்தோருக்கான சமூகநல உதவிகளை மட்டுப்படுத்தல்

4) வெளிநாட்டுக் குழந்தைகள் தாய்மொழி கற்றுக் கொள்ளும் உரிமையை இல்லாதொழித்தல்

5) இங்குவாழும் வெளிநாட்டவர்களின் வதிவிட அனுமதியை ரத்துச்செய்து நாட்டைவிட்டு இரவேடு இரவாக வெளியேற்றல்

போன்ற பலவளிகளில் இங்கு வாழும் வெளிநாட்டவர்கள் மீது தனது நாசிச இனவெறிஅரசியல் மூலம் மறைமுகமான பயமுறுத்தலை நடைமுறைப் படுத்துகிறது. தொழிலாளர் கட்சி என தம்மை அழைத்துக்கொள்ளும் இவ்வரசு நடைமுறையில் நாசிச இனவெறி அரசியலே நடத்துகிறது. எங்களின் மேற்படி கூற்றானது உங்களில் பலருக்கு ஆத்திரத்தையும் எரிச்சலையும் உண்டு பண்ணலாம். ஆனால் இது உண்மை. வெளிப்படையாக சாதரணமாக எல்லோருக்கும் விளங்கக்கூடியதொன்று. எமது இக்கருத்துடன் சமூக ஆய்வு நிறுவனங்களும், இடது சாரிப் பத்திரிகைகளும், நாசிச பாசிச எதிர்ப்பு அமைப்புக்களும் உடன்படுகின்றனர்.

இவ்வரசின் இனவாத அரசியல் நடவடிக்கைகளினால் குடிபெயர்ந்த அனைத்து தேசிய இனமக்களிடையேயும் ( பாக்கிஸ்தான், வியட்நாம் —— ——) பொருளாதாரக் கஸ்டமும் வேலையில்லாத்திண்டாட்டமும், இளைஞ்ஞரிடையே வன்முறையும் ஓங்கியுள்ளது.

பல நூற்றுக்கணக்கான குடியேறிய இனக்குழுக்களைச் சேர்ந்த இளைஞ்ஞர்கள் பலர் வேலையில்லாது திண்டாடுகின்றனர். இவர்களில் பலர் படித்திருந்தும் தோலின் நிறம் காரணமாக தொழில்வாய்ப்பு மறுக்கப்படுகின்றனர். பொது இடங்களான டிஸ்கோ, கபே, நடனஅரங்குகளில் தோல்நிறம் காரணமாக அனுமதி மறுக்கப்படுகின்றனர். மேலும் நாசிசக் குழுக்கள் இரவு நேரங்களில் நகரத்திலும், வீதிகளிலும், ஒழுங்கைகளிலும் குடியேறியோர் மீது தாக்குதல் நிகழ்த்துகின்றனர்.

மொத்தத்தில் இச்சமூகமானது எம்மை வெறுத்து ஒதுக்குகிறது. இந்நிலைகாரணமாக வெளிநாட்டு இளைஙஞர்கள் குழுக்களாக இணைந்து தமக்குள் தாமே மோதுவதுடன் நோர்வேயிய இளைஞ்ஞர்களுடனும் மோதுகின்றனர். இம்மோதல்கள் நோர்வேயியர்களைப் பொறுத்தமட்டில் தமது கலாச்சாரத்திற்கும் சமூகத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளாகக் கருதுகின்றனர். இவ்வன்முறைகளுக்கு அடிப்படைக்காரணம் நமது கலாச்சாரம் எனவும் முட்டாள்தனமாக நம்புகின்றனர். இவ்வன்முறைகளுக்கு உண்மையில் காரணமாகவுள்ள அரசின் பிரித்தாளும் நிறவாத அரசியலை மக்கள் விமர்சிக்கவோ அல்லது புரிந்து கொள்ளவோ தயாராகவில்லை. சரியான தகவல் அடிப்படையில், சமூகத்தை புரிந்து கொள்ளாத மக்களிடையே நாசிச, பாசிச, இனவாத, நிறவாத சாதிவெறி ஓங்குகிறது. நம் தமிழ் சமூகம் மட்டும் என்ன சுத்தமானதா? இங்கு புலம் பெயர்ந்த எமக்குள்ளேயே சாதிவெறி எந்தளவிற்கு மேலோங்கி உள்ளதொன்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை. ஓரேநிறம், ஓரேநாடு, ஓரேமதம் அனைத்தும் ஒன்றாய் கொண்டவர்களான நாமே சாதி அடிப்படையில் நளவன், வண்ணான் வெள்ளாளன், கரையான், ......... ......... எனப்பிரித்து மனிதர்களை ஒடுக்குகின்றோம். மறுதலையாக தமிழர்களை அதுவும் சாதிபாராட்டும் தமிழர்களையும் மற்றவர்களையும் வெள்ளையன் துரத்தித் துரத்தி அடிப்பதில் நியாயம் உண்டு. ஏனெனில் தன் சகோதரனையே சாதிஅடிப்படையில் ஒடுக்குபவனுக்கு நிறவாதத்தை தட்டிக்கேக்க எந்தவித தார்மீக பலமும் கிடையாது.

நடந்து முடிந்த தேர்தலில் வாக்குரிமையுள்ள கிட்டத்தட்ட மூவாயிரம் தமிழர்களில் 30 வீதமானவர்களே வாக்களித்துள்ளனர். பெரும்பான்மையானவர்கள் வலதுசாரிக் கட்சியான (ர்□லுசுநு), கிறிஸ்தவ மக்கள் கட்சி (முசுகு), தொழிலாளர் கட்சிக்கும் (யூீ) வாக்களித்துள்ளனர். இதுகாட்டுவது என்னவெனில் இங்கு குடியேறிய தமிழர்கள் வர்க்கரீதியாக, சிந்தனைரீதியாக எந்த அரசியல்கருத்தை கொண்டுள்ளார்கள் என்பதனையே. வலதுசாரிக் கட்சியானது நோர்வேயில் வாழும் பணக்காரர்களின் நலனையும், முசுகுயூீ பணக்காரர்கள், மத்தியதர வர்க்கத்தின் நலன்களை அரசியற் செயற்திட்டங்களாகக் கொண்ட கட்சிகளளாகும். அதுமட்டுமல்லாது இனவாத அரசியலில் தமக்குள் தாமே நடைமுறையில் போட்டி போடுவனவாகும். சுமைகளிடம் உள்ள தரவுகளின் படி தமிழர்களில் பலர் வலதுசாரிக் கட்சியிலும், தொழிலாளர் கட்சியிலும் உறுப்பினராகவுள்ளனர். தமது பணபலத்தையும் வர்க்க நலனையும் மேல்சாதியையும் அடிப்படையாகக் கொண்டு வலது சாரி கட்சியில் உறுப்பினர்களாக சில தமிழர்களும், தமது சுயநலன்கள் சிலவற்றை குறிப்பாக வதிவிட அனுமதி பெறல், வேலைவாய்பு போன்ற நலன்களை பெறஇறுக் கொள்வதற்காக ஆட்சியில் உள்ள தொழிலாளர் கட்சியிலும் இணைந்துள்ளனர்.

மேற்கூறிய அரசியல் நிலைப்பாடானது தமிழர்களுக்கு மட்டுமல்ல பாக்கிஸ்தானியர், இந்தியர்களுக்கும் பொருந்தும். ஆய்வாளர்களின் கருத்துப்படி பெரும்பான்மையான மேற்கூறிய நாட்டைச் சேர்ந்தவர்கள் பணக்காரக் கட்சிகளுக்கே வாக்களித்துள்ளனர். தற்போது நோர்வேயிலும் ஐரோப்பாவிலும் இனவாதம் நிறவாதம் பாசிசம் நாசிசம் வளரத் தொடங்கிவிட்டன. எமது வாழ்வு இங்கு நிலையானது என நாம் நினைத்தால் *பட்டுவேட்டிக்கு ஆசைப்பட்டு கட்டியிருந்த கோவணத்தை இழந்த கதையகவே* போய் முடியும் எம் வாழ்வு மிகவிரைவில் நாம் அனைவரும் நவீன யூதர்களாக ஐரோப்பாவில் இருந்து அடித்து விரட்டப்படலாம் சரியான அரசியல் கருத்தின அடிப்படையில் எமது தேசத்தில நிலையான சமாதானமும் சுபிட்சமும ஏற்பட நாம் இங்கிருந்தோ அல்லது வேறு விதமாகவோ போராட வேண்டும். யார்செத்தாலும் எனக்கு "சிற்றிசன்" கிடைத்தால் போதும என்னும் மனநிலையைவிடுத்து எதிர்காலத்தைப்பற்றி சிந்திப்போம நாட்டில் உள்ள கறுப்பு நாசிசத்திற்கு எதிராக போரிடுவதன் மூலமே வெள்ளை நாசிகள் அடித்து துரத்தும் போது நாம் மரியாதையுடன நமக்கு ஒரு சமாதானத்துடன் கூடி தேசத்தை உருவாக்க முடியும்.

படிப்பகம்

www.padippakam.com



# ஈழப் போரின் இழுபறிநிலை....

பக்கத் தொடர்ச்சி

அவ்வளவு பேரையும் கொன்று நுவம்சம் செய்தது.

சிங்கள இராணுவத்தின் ணக்குப்படி 280 புலிகள் இந்தத் ாக்குதலில் கொல்லப்பட்டனர். அதில் 28 பெண்கள். பலர் சிறுவர்கள். இதே பான்று எதிர்பாராத் தாக்குதலை டத்தி பெரும் எண்ணிக்கையில் காண்றழிப்பதை புலிகளும் செய்துள்ளனர். முன்பு பூநகரியில், மீபத்தில் மண்டை தீவிலும் சிங்கள ிராணுவமுகாம்களின் மீது நடந்த டீர் முற்றுகைத் தாக்குதலில் திரிகள் பேரிழப்பிற்கு உள்ளாகினர்.

ஆனால் யூலை 28 மணலாறு வலிஓயாவில் நட3ந்த இராணுவத் ாக்குதலுக்குப் பிறகு நடந்தவை பரதிர்ச்சியைத் தருபவை. இந்த வற்றியை சிங்களை இனவெறி ிராணுவத்தினர் மிகவும் குரூரமான, க்கிரமான முறையில் உலக ிராணுவ போர்களின் வரலாற்றில் வறெங்கேயும் இப்படியும் நடக்குமா ன்பது சந்தேகமே காண்டாடியிருக்கின்றனர். போரில் கால்லப்பட்ட புலிப்படையின் பெண் பாராளிகள் அவ்வளவு பேரும் ர்வாணமாக்கப்பட்டு, வரிசையாக டுக்கப்பட்டு பொதுமக்களுக்கும், த் திரிகையாளர்களுக்கும் ாட்டப்பட்டதோடு, அந்தக் ரூரமான, வக்கிரமான காட்சி ானொளிகளிலும் காட்டப்பட்டது.

மணலாறு வெலியோயா கொலையின் வெற்றிக்களிப்பில் ங்கள இராணுவமும், அரசும் ந்து கொண்டிருந்த அதேசமயம் வர்களுக்கு தக்க பதிலடி காடுக்கத் தொடங்கிவிட்டனர் டுதலைப்புலிகள். இராணுவ காம்களைப் பார்வையிட்டுத் ரும்பிய கிழக்கு இராணுவ ரசாங்கத் தலைமைத் தளபதி கேடியர் நளின் அங்கமானாவை ண்ணிவெடி வைத்துக் ாண்றொழித்தனர். அடுத்த சில ட்களிலேயே, கொழும்பு நகரின் தியிலுள்ள இலங்கை மேற்கு காண முதலமைச்சரின் லுவலகத்தைக் குண்டு வைத்து ர்த்தனர். 20 பாதுக்கும் மேலான ரச ஊழியர்கள் மாண்டதோடு திற்கும் மேலானோர் காயமுற்றனர். அத்தோடு ஓரிரு ட்களிலேயே மட்டக்களப்பிற்கு நகில் உள்ள ஒரு இராணுவ காமில் குண்டு வைத்து சிலரைக் ாண்றொழித்தனர்.

இலங்கை–ஈழத்தமிழர் நிர்ணய உரிமைப்பிரச்சனை, ன்டும் அடுத்த சுற்று வலையம் து தீர்வு காண முடியாத இழுபறி லைக்கு திரும்பியுள்ளது. 1983 லை ஜுழத்தமிழர் மீதான ாப்படுகொலைக்குப் பிறகு போர், ர்நிறுத்தம், சமாதானப் பேச்சு த்தை மூலம் தீர்வு காண முயற்சி, நு முறிவு, மீண்டும் போர் கின்ற பாதையில் நான்கு றுக்குள் வந்து விட்டது.

பிரச்சனைக்கு அரைகுறையான அரசியல் திட்டம், தீர்வுகளினாலோ, முழு அளவிலான இராணுவப்படையெடுப்புகளாலோ விடிவு காண முடியாதென்பது மீண்டும் ஒருமுறை நிறுபணமாகியுள்ளது. ஆனால் ஒவ்வொரு முறையும் பிரச்சனை மேலும் சிக்கலாவதோடு இராணுவ ரீதியில் மட்டுமல்லாது இருதரப்பிலும் குறிப்பாக ஈழத்தமிழர்களுக்கு பேரிழப்புகளும் துயரங்களும் அதிகரித்தே வருகின்றன. ஆனால் சந்திரிக்கா தலைமையிலான இலங்கை அரசு, விடுதலைப்புலிகள் ஆகிய இரு தரப்புமே இப்போது நடப்புது இறுதிக்கட்டப்போர் எனறு பிரகடனப்படுத்தியுள்ளன.

பன்னிரெண்டு ஆண்டுகளாக நீடித்து வரும் இலங்கை உள்நாட்டுப் போருக்கு இதுவரையில் காணாத மிகமிகச் சரியான, திறமையான தீர்வேன்றை அதிபர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கே கண்டுவிட்டதாக உலகின் பிற்போக்கு சக்திகள் அனைத்தும் புகள்கின்றன. "1993 இல் நடந்த மாகாண சபைத் தேர்தலில் வென்று மேற்கு மாகாண முதல்வராவதற்கும், அதன் பின் 1994 இல் நாடாளுமன்றத் தேர்தலில் வென்று பிரதமராவதற்கும், அப்புறம் 194 இறுதியில் அதிபர் தேர்தலில் வெல்வதற்கும் அடிப்படையாக, ஈழப்பிரச்சனைக்கு சமாதானத் தீர்வு காண்பதே தமது லட்சியம் என்கின்ற முழக்கத்தை முன்வைத்தார். நீண்ட போரினால் அவதிப்பட்ட சிங்கள மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்று அடுத்தடுத்து உயர்ந்த பதவிகளைப் பெற்று அதிபரானார். பிரதமராக இருந்த போதே போர்நிறுத்தத்தைக் கொண்டு வந்து, புலிகளுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு பேச்சு வார்த்தைக்கு அடித்தளமிட்டார். போர் நிறுத்தம், பொருளாதாரத் தடைநீக்கம், 4000 கோடி ரூபாய் ஈழ அபிவிருத்தி–மறுசீரமைப்புத் திட்டம்வழங்கினார். ஆனால் யுத்தவெறிபிடித்த பிரபாகரன் போர்நிறுத்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு, இராணுவ பலத்தைப் பெருக்கிக் கொண்டு ஒருதலைப் பட்சமாக போர்நிறுத்தத்தை முறித்துக் கொண்டு மீண்டும் போரைத் துவக்கினார். இது சந்திரிக்காவிற்கு ஏமாற்றமளித்தாலும், முன்னேறும் பாச்சல் நடவடிக்கை என்னும் இராணுவத் தாக்குதலில் இறங்கி ஈழத்தின் பலபகுதிகளை புலிகளிடமிருந்து மீட்டு இராணுவ ரீதியில் மேல் கை நிலையை ஏற்படுத்துவதில் வெற்றிகண்டார்.

"அதேசமயம் இராணுவத் தீர்வை மட்டும் நம்பியிராமல் கடந்த ஆகஸ்ட் மாதம் 3ந் திகதி ஒர அரசியல் திட்டத்தையும் அறிவித்துள்ளார். சிங்கள இனவெறிக் கலவரத்தில் தகர்க்கப்பட்ட 1957 பண்டாரநாயக்க, செல்வா ஒப்பந்தம், புலிகளால் தகர்க்கப்பட்ட 1987 ராஜுவ், ஜெயவர்த்தனா ஒப்பந்தம் ஆகியவற்றைக் காட்டிலும் ஈழத்தமிழர்களுக்கு கூடுதலான அதிகாரத்தை வழங்கக் கூடியது சந்திரிக்கா அறிவித்துள்ள இத்திட்டம். முதன்முறையாக இலங்கையின் ஒருமை அரசியல் அமைப:பை மாற்றி, பிராந்தியங்களின் ஒன்றியமாக்கப்படும். ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும், தமிழ் சிங்களம் இரண்டுமே ஆட்சிமொழியாக்கப்படும். பிராந்திய முதல்வரும் அமைச்சர்களும் அடங்கிய வாரியம் அமைக்கப்படும். அவர்களுடைய ஒப்புதல் பெற்ற ஆளுநர்களே நியமிக்கப்படுவர். பிராந்திய சட்டமன்றத்துக்கு மட்டுமே பிராந்திய ஆட்சியை நீக்கும் உரிமை தரப்படும். பிராந்திய ஆளுநரோ மத்திய அரசோ (இந்தியாவில் செய்வதைப் போல) ஆட்சிக் கலைப்பு செய்ய முடியாது. மத்திய பிராந்திய அரசுகளுக்குப் பொதுவான அதிகாரங்கள் கிடையாது. இந்திய மாநிலங்களுக்குள்ளதை விட அதிக அதிகாரங்களும், ஒலி ஒளி பரப்பு உரிமைகள் நேரடி அந்நிய முதலீடு தொழில் வர்த்தக உறவுகளும் கூட ஏற்கப்படுகின்றன. தேசிய பேலீசு அமைப்ப இருந்தாலும் பிராந்திய அரசுகளுக்கு எதிரான அவசர ஆதிக்க அதிகாரம் எதுவும் மத்திய அரசுக்குக் கிடையாது" இப்படி சந்திரிக்காவின் அரசியல் திட்டத்தின் அருமை பெருமைகளைப் பட்டியலிட்டும் அவரது ஆதரவாளர்கள் இதமன் மூலம் முதன் முறையாக இலங்கையில் பல மொழிச் சிறுபாண்மை இனபாகுபாட்டையும் பல பண்பாட்டு மாறுபாட்டையும் அதிகார பூர்வமாக அங்கீகரிக்கப்படுவதாகப் போற்றுகின்றனர். பெரும்பாண்மையான ஈழத்தமிழர்கள் ஏற்கக் கூடியதுதானென்றும் சிங்கள இனத்தவரும் குறிப்பாக இனவாத அரசியல் கட்சிகளும், குளுக்களும் ஏற்க வைப்பதில் தான் சிரமமுள்ளது என்றும் விடுதலைப் புலிகள் இத்திட்டத்தை தகர்க்க முயன்றாலும் தமிழ் மக்களிடமிருந்து அவர்களைத் தனிமைப்படுத்தி இராணுவ ரீதியில் ஒடுக்கிவிட முடியும் என்றும் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

ஆனால் சமாதான முயற்சி போர் நிறுத்தம் என்ற பெயரில் சந்திரிக்கா அரசும் இராணுவத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்தது. அமைதியைக் கருணையைப் போதிக்கும் புத்த பிக்குகள் கூட சிங்கள இனவெறிர்களாக உள்ளதால் தமது காவியுடையைக் கலைந்து விட்டு இராணுவத்தில் சேருகின்றனர். பெண்கள் உட்பட சிங்கள இளைஞர்களை இராணுவத்தில் சேரும்படி துண்டுகின்றனர். இதையெல்லாம் ஒருபுறம் செய்து கொண்டே அதிகாரப் பகிர்வு சமாதானம் என்கிற மாய்மாலம் செய்கிறது சந்திரிக்கா அரசு. ஞழத் தமிழின துரோக அமைப்புகள் இதை ஏற்கும் அதேசமயம், கிழக்கு மாகாணத்தில் தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் மட்டுமே வடக்குடன் இணைக்கப்பட்டு தமிழர் பிராந்தியம் அமைக்கப்படும் என்பதை மட்டும் அட்சேபிக்கின்றனர். இது இலங்கைக் குடியேற்றத்தை . அங்கிகரித்து நிரந்தரமாக்கிவிடம் எனக் கூறுகின்றனர். ஏற்கனவே வரதராஜப்பெருமாள், பத்பநாபா கும்பல் செய்வதைப் போல ஈழத்தில் இன்னேரு துரோகப் பொம்மை ஆட்சியை நிறுவிவிடத் தயாராகி வருகின்றனர். ஆனால் அதற்கு அவர்கள் உயிரையே விலையாகத் தரவேண்டி இருக்கும். மணலாறு வெலிஓயாத் தாக்குதலினால் பேரிழப்பையும், பின்னடைவையும் சந்தித்த போதிலும் எதிர் தாக்குதலைத் தொடங்கிவிட்ட விடுதலைப் புலிகள், சந்திரிக்காவின் அரசியல் திட்டத்தை முற்றாக நிராகரித்து விட்டனர். ஜேயவர்த்தனா, பிரேமதாசா முதலிய முந்திய சிங்கள அரசு அதிபர்கள் கொடூரமான இனவெறியர்களாக மட்டுமே இருந்தனர். ஆனால் அத்தோடு சந்திரிக்கா ஒரு தந்திரிகா எண்ணுமளவு சூழ்ச்சி சதிகாரியாகவும் இருக்கின்றார் என்கின்றனர் புலிகள். ஆனால் அதே புலிகள் தாம் பிரதமராகவும், அதிபராகவும் பதவியேற்று பேச்சு வார்த்தை போர்நிறுத்தம் தொடங்கியபோது உண்மையான ஜனநாயகவாதி, சமாதான விரும்பி என நம்பும்படி ஈழத் தமிழர்களுக்கு சொன்னார்கள். தனி ஈழம் மட்டுமல்ல, சுயநிர்ணய உரிமைகூடத் தேவையில்லை, மாநில சுயாட்சியானாலும் ஏற்கத் தயார் என்ற புலிகளின் சித்தாந்தக்குரு அன்டன் பாலசிங்கம் அறிவித்தார். ஆனால் இப்போது போர் ஒன்றுதான் என்று எழுச்சியில் இறங்கிவிட்டனர். "நிதியும், ஆட்பலமும் இருந்தால் 20ம் நூற்றாண்டுக்கு முன் ஈழம் மலரும்" என்று புலிகளின் நிதிப்பொறுப்பாளர் தமிழேந்தி கூறுகிறார்.

நிதிபலமும் ஆயுதபலமும் திரட்டுவது கூட சாத்தியமாகலாம், புலிகள் அதில் திறமை சாலிகள் தான் ஆனால் முடிவே இல்லாமல் போரிடவும், பலியிடவும் தேவையான படைபலம் அவர்களுக்கு எங்கிருந்து எப்படி பெறமுடியும். ஒரு தலைமுறையின் இளைஞர்களின் பெரும்பாலானோர் கடந்த 12 ஆண்டு போர்களிலும், தோழமைக் கொலைகளிலும் குடியேற்றங்களிலும் இழந்தாகிவிட்டது. பெண்கள் இராணுவச் சேவையிலும், போரிலும் ஈடுபடுவது சரியானது, அவசியமானது. ஆனால் துப்பாக்கி சுமக்க முடியாத சிறுவர்கள் கூட ஈழப்போரில் பலியாக்கப்படுகின்றனர். ஈழ தேசபக்தியில் உறுதியோடிருப்பினும், புலிகளின் பாசிச தலைமையை ஏற்க மறுக்கும் காரணத்திற்காக பல இளைஞர்கள் ஞழத்தில் இருந்து விரட்டப்படுகின்றனர், வேட்டையாடப்படுகின்றனர். புலிகளுடன் உடன்படாதவர்கள் கூட துரோக முத்திரை குத்தி வேட்டையாடப்படும் நிலையில் உண்மையிலேயே புலிகளிடையே துரோகிகள் உருவாகியிருப்பது மணலாறு வெளிஓயா சம்பவம் நிருபித்துள்ளது. தன் நிழலைக் கூட நம்பாத பாசிச புலிகளுக்கு இது மேலும் வெறியூட்டவே செய்யும்.

இராணுவ ரீதியில் வெற்றிகளைச் சந்தித்திருப்பதாக உரிமை பாராட்டினாலும் சமீபத்தில் அது கைப்பற்றிய சந்திப்பிளி, துண்ணாவி, பொன்னாலை, அராலி, வட்டுக்கொட்டை ஆகிய பகுதிகளில் இருந்து பின்வாங்கும் படி நிர்ப்பந்திக்கப்பட்டது. "நாங்கள் சண்டைகளில் வெற்றி பெறமுடியும், ஆனால் போரில் வெல்வதென்பது சாத்தியமே இல்லை" என்று சந்திரிக்காவே ஒப்புக்கொண்டுள்ளார். அதே சமயம் புலிகளும் இராணுவ ரீதியிலான இறுதி வெற்றியை ஈட்டமுடியாது என்பது தெளிவானது. இப்போது சந்திரிக்கா முன்வைத்துள்ள அரசியல் திட்டமோ ஈழத்தமிழரை தேசிய இனமாக அங்கீகரித்து சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை ஏற்கமறுத்துள்ளது. இந்தியா மானிலங்களுக்குள்ளதை விட கூடுதலான அதிகாரம் வளங்குவதாக இருந்தாலும் சுயநிர்ணய உரிக்க குறைவான எதையும் ஞழத்தமிழர்கள் ஏற்க முடியாது. மேலும் சிங்கள அரசுகள் அறிவிக்கும் அதிகாரப் பகிர்வு ஒப்பந்தங்களை நேர்மையாக அமுலாக்கியதாக வரலாறே கிடையாது. சுயநிர்ணய உரிமைக்கு குறைவான எந்தவொரு தீர்வும் ஈழத்தமிழருக்கு துரோகமானதேயாகும்.

ஆனால் அதை அடைவதற்கு சில முன்நிபந்தனைகள் தேவை. விடுதலைப் புலிகள் பாசிசத் தலைமையை மாற்றி அமைத்து ஈழதேசபக்த ஜனநாயக சக்திகளையும் ஒருங்கிணைக்கும் பரந்த ஐக்கிய முன்னணி நிறுவப்பட வேண்டும். ஈழத்துரோக அமைப்புகள் தவிர இலங்கையிலும், வெளிநாடுகளிலும் புலம் பெயர்ந்துள்ள அனைத்து ஈழத் தமிழர்களும் அமைப்புகளும் ஈழம் திரும்பவம், சிங்கள இராணுவ ஆதிக்கத்துக்கு எதிராகப் போரிட அழைக்கப்படவேண்டும். அவ்வாறான ஐக்கிய முன்னணியின் கீழ் ஈழப்போரைத் தொடரும் அதே சமயம் ஈழ சுயநிர்ணய உரிமையை ஏற்கும் படி சிங்களப் பெரினத்திற்கு நெருக்கடியளை உருவாக்க வேண்டும். தொடரும் போர் அதை நிச்சையம் ஏற்படுத்தும். அதை அவ்வினம் ஏற்காமல் போனாலும் பரந்த ஈழ தேசிய ஐக்கிய முன்னணிதான் இராணுவ ரீதியான தீர்வுக்கு நிச்சயமான தலைமையை அமைக்கும்.

இக்கட்டுரை இந்தியாவில் இருந்து வெளியாகும் புதிய ஜனநாயகம் (1 ஆகஸ்ட் – 15 செப்டம்பர்) என்ற சஞ்சிகையில் இருந்து மீள் பிரசுரம் செய்கிறோம். இக்கட்டுரையுடன் நாம் முற்று முழுதாக உடன்படாவிட்டாலும் சமகால நிலையினைப் பற்றி எடுத்துக் கூறுவதாலும், சந்திரிக்காவின் சமாதானத் தீர்வுத் திட்டம் எந்தளவு பம்மாத்தானது என்பதையும், இதை இன்று சரி என .வாதிடுபவர்களை இவர்களும் எவ்வாறு கணிக்கின்றனா என்பதை எமது வாசகர்களுக்கு படம் பிடித்துக்காட்டுவதற்காகவே மீள் பிரசுரம் செய்கின்றோம்.

சுமைகள்

படிப்பகம்

www.padippakam.com



**AVSENDER / FROM:**

**Sumaihal**
**postboks: 415**
**9001 TROMSØ**
**NORWAY**

# BLAD:

**MOTTAKER / TO:**

## இன்றைய இலங்கையின் நிலை இதுதானா?

நம் தேசத்தில் நீண்டகாலமாக யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. யுத்தத்தின் பொருளாதார அழிவுகளை ஈடுசெய்ய முடிந்தாலும் இழந்த மனித உயிர்களையும், அழந்து போன அங்கங்களையும், இவ்விழப்புகளால் ஏற்பட்ட துன்பங்களையும் எவராலும் எக்காலத்திலும் ஈடுசெய்ய முடியாது. அண்மையில் கிழக்கு மாகாணத்தில் விதவைகள், சிறுவர் புனர்வாழ்வு நிறுவனம் ஒன்றில் பனியாற்றும் பெண்ணிலைவாத அமைப்பொன்றின் சர்வதோச தொடர்பாளர் ஒருவருடன் உரையாட நேர்ந்தது. அவரின் கருத்தின் படி கிட்டத்தட்ட 5000 விதவைகள் கிழக்கு மாகாணத்தில் மட்டும் வாழுகின்றனர். அங்கமிழந்த ஆண்கள், சிறுவர்கள், பெண்கள் 7500 மேற்பட்ட தொகையினர் கிழக்குப் பகுதியில் உதவியற்ற நிலையில் திண்டாடுகின்றனர் எனத் தெரிவித்தார். இதனால் ஏற்கனவே சுமைகளில் வெளியான இதெ கருத்தை ஒட்டிய கட்டுரை ஒன்றை சில மாற்றங்கள் செய்தபடி கீழே தருகின்றோம்.

## இதற்கு நாம் என்ன செய்யப் போகிறோம்?

இன்று யுத்தத்திற்காகப் பாவிக்கப்படும் போர்க் கருவிகள், இரசாயனக் கலவைகள், நச்சுக் குண்டுகள் போன்றவற்றால் சுற்றாடலும் வளிமண்டலமும் மாசடைந்து வருகின்றது. இம்மாடைவினால் எம்நாடு பலவகையான பரிச்சனைகளை எதிர் நோக்கியவண்ணம் உள்ளது. இவற்றில் யுத்தங்களினால் நோரடியாக பாதிக்கப்படும் மக்களை விட அதிக மானோர் யுத்தத்தில் அல்லது அதற்காக ஆயுதங்களைப் பரிசோதிக்கும் போது வெளியேறும் நச்சு வாயுக்களால் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். யுத்தம் நடைபெறும் காலங்களில் யுத்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள் அகேமானோர் எதாவது ஒரு விதத்தில் பாதிக்கப் படுவார்கள் அப்படிப் பாதிக்கப்படுபவர்களில் அனேகமாகோர் தமது அங்கங்களை அழந்து அங்கவீனர்களாகின்றனர். நேரடியாகப் பாதிக்கப்படுவதுடன் யுத்தத்தினால் ஏற்படும் பாதிப்பு முடிந்து விடவில்லை மாறாக அது பிறக்கும் குழந்தைகள் மூலமாகத் தொடர்கின்றது. அக்குழந்தைகள் பிறக்கும் போதே உளவியல் ரீதியான பாதிப்புக்களுடனோ, அல்லது அங்கவீனர்களாகவே பிறக்கின்றனர். உதாரனமாக இரண்டாம் உலக யுத்தத்தின் போது அமெரிக்காவால் யப்பானின் நகரங்களான கிரோசீமா, நாகஷகி போன்ற நகரங்களின் மீது வீசிய அணுக்குண்டின் பாதிப்பால் தற்போது கூட அங்கவீனமான குழந்தைகள் யப்பானில் பிறக்கின்றன. இதே நிலைதான் வியட்னாமிலும் என்பதை நாமு தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலம் அறிய முடிகிறது.

நம்நாட்டு யுத்தத்தில் இவ்யுத்தத்தினால் அங்கவீனர்களாக்கப்பட்டவர்களில் பல பிரிவினர் உள்ளனர் அவர்களில் தனிமையில் பார்வை இழந்தவர்களை மாத்திரம் கவனிப்போமாயின் இவர்கள்தான் அதிகமாக தம்மை இழந்தவர்களாகின்றனர். பார்வை இழந்தவரின் வெளியுலகமும் இருண்டு விடுகின்றது. இவர்களின் மனோநிலை அதிகமாக பாதிக்கப்படுகின்றது. இவ்வாறு பாதிக்கப்படும் பலர் வறுமைக்கோட்டின் வரம்பில் வாழ்பலர்கள் தான். இந்நிலை உருவாகியதும் பார்வை இழந்தவர்களின் வாழ்கை மற்றயவரை சார்ந்து வாழவேண்டய நிலைக்குத் தள்ளப்பட்விடுகின்றது. இதனால் அக்குடும்பத்தின் எதர்கால வாழ்கையும் கேள்வி உரியதாகிறது. இவ்வாறு தமது வாழ்கையை இழந்து இருட்டில் தள்ளப்பட்டவாகள் மீது எமது சமூகம் தனது வழமையான, குறைபாடுகளுடனான ஒருவனை ஏற்றுக்கொள்ளாக் கூடிய மனப்பக்குவம் இல்லாதமையால் அவர்கள் பலவிதமான நிந்தனையை அனுபவிப்பதையும் நாம் அறியக்கூடியதாக உள்ளது. பாதிக்கப்பட்ட ஒருநபர் ஏதாவது செய்வாராயின் அவரது பெயரைக் கூறிப்பிடாது அவர் எந்தவகைப்பாதிப்பை பெற்றுள்ளார் என்பதை வைத்து அவரின் பெயருடன் இனைத்து அடைமொழியாக அப்பாதிப்பை சுட்டிக்காட்டுவது வழமயாகிப் போன விடையம். இந்நிகழ்வு அந்நபரை எவ்வளவு பாதிக்கும் என்பதைப்பற்றி யாரும் அலட்டிக் கொள்வதில்லை. உண்மையில் அவருகு நான் தனது அங்கத்தை இழந்த போது ஏற்பட்டதிலும் விட இரண்டு மடங்கு அதிகமாகவே இருக்கும்.

திருமணமாகாத பெண்ணோ அல்லது ஆணோ இந்நிலைக்கு தள்ளப்பட்டால் அவர்களின் எதிர்காலமும் பின்தள்ளப்படுகின்றது. குறைகாடுகளுடன் வாழ்மகத்து துணையாக ஏற்றுக்கொள்ள யாரும் முன்வருவதில்லை. எமது தாய்நாட்டில் இப்படியான நிலைமைகளில் இன்று பலரைச் சந்திக்க முடியும். இவர்களுடைய எதிர்காலம் தான் என்ன? என்ற கேள்வியைக் கேட்கும் போது விடை தெரியாத கோள்விக் குறிகள்தான் முன்னே எழுகின்றன. எமது தேசத்தில் மக்கள் எல்லோருமே யுத்தத்தின் கோரப்பியெயில் சிக்கித் தவிக்கின்றனர். யுத்தத்தின் விளைவுகளை தனிப்பட்ட ரீதியாகப் பார்க்க முடியாது. சில வசதிபடைத்த குடும்பங்கள் தாமே அதற்கு தீர்வு காண்கின்றனர். ஆனால் எல்லோருக்கும் முடிவதில்லை. புலம் பெயர்ந்து வாழும் நாம் இத்தகைய பிரச்சனைகளுக்கு பொருளாதார ரீதியாகவேனும் உதவிசெய்யக் கடமைப்பட்டிருக்கின்றோம். பொருளாதார உதவி செய்வேமாயின் ஓரளவேனும் எதிர்காலத்தில் இப்படி பாதிக்கப்பட்டவர்களிக் வாழ்வு வளம்பெற வளிவகுக்கும்.

## வட துருவம் நோக்கி

மா. ஐங்கரன்

எங்கள் மண்ணில்
இரத்தமே ஆறாய் ஓடிட
புகையும் குமட்டி
இருளாகிப் போன
பகற் பொழுது கண்டு
துவண்டுபோய் நாங்கள்
வட துருவம் நோக்கி.

எம்மூரான் இங்கு வந்து
கோயில் செய்தான்
எங்கேயோ கிடந்த ஐயன்
பூசை செய்தான்.
குழுவாகச் சிலபேர்
பணமாய் தின்றார்,
புரியாது எம் மக்கள்
விழாக்கள் செய்தல்.

ஐயனும் கருவறை
குந்திக் கொண்டான்
எம்மக்கள் இப்போதும்
வெளியிலென்று- எப்போதுமாய்
மனுநீதி கற்கச் சென்னான்.
வேத- இதிகாசங்களை(ப்)
புகழ்ந்து சென்னான்.

இப்படிக் கதைகளைக் கட்டி
சைவமும் ஈர்ந்ததோர்
நாசிக் கூட்டம்- இந்துவாய்.

எம்முன்னே நீயுண்ட
புலாலோ மிச்சம்
வேதியர் புழுகிலே
மாட்டிய மக்கள்
எழுதிய வேத இதியாசங்களை
எரித்து அழித்தல்.

யாராடா புழுகிவைத்தான்
எவனடா அதைக் கோட்டு
ஆட்சி செய்தான்
அரியோடு யாரடா
போகஞ் செய்தான்.

யாவும் புரிந்தவர் நீங்கள்
அவர்கள் புழுகிலே
செத்தது போதும்
எம்மவர் மீது
புதிய நாசிக் கூட்டத்தின்
எரிப்புகள் கண்டு
புளுங்கிப் போனோம்!

இவையெல்லாம் எமக்கு
எப்போதோ பழையது
அரை நூற்றாண்டு நாசிகளென்ன
3000 வருடத்து முதுகென்புமுத்திய
நாசிகள் உள்ளனர்
எங்கள் மத்தியில்.

**எந்தவர்க்கம் ஆதிக்கத்தில் உண்டோ, அவ்வர்க்கத்தின் சிந்தனையே சமூகத்தை ஆள்கிறது!**

படிப்பகம்